விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-1167)

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 22 வெள்ளிக்கிழமை (05.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 168

# இந்தியாவின் ஏற்பாட்டிலேயே புலிகளின் சரணடைவு நடந்தது

## ஆட்கொணர்வு மனுவில் அனந்தி சாட்சியம்



(முல்லைத்தீவு)

இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் சரணடைவு இந்தியாவின் ஏற்பாட்டில்தான் நடைபெற்றதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றில் நேற்று நடைபெற்ற ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கில் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## செப்ரெம்பரில் புதிய நாடாளுமன்றம் விரைவில் தேர்தலை நடத்த ஏற்பாடு

### ஊடக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய நாடாளுமன்றத்தை எதிர் வரும் செப்டெம்பரில் அமைப்பதற்கான தேர்தல் விரைவில் நடத்தப்படும் என ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை அவர் குறிப்பிட்டிருந்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் அபிவிருத்தி செயற்பாடுகள் பல நிறுத்தப்பட்டுள்ளதாக சில அரசியல்வாதிகள் தெரிவிப்பதில் எவ்வித உண்மையும் இல்லை.

சகலவிதமான அபிவிருத்தி நடவடிக்கை 24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்

(கொழுபு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் புதிய பொறுப்பதிகாரியாக பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் முன சிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் முதலாம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் இந்த நியமனத்தை பொலிஸ் மா அதிபர் வழங்கியுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த மூத்த பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்க தொடர்ந்தும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி 23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலை வலியுறுத்தும் மாதுளுவாவே தேரர்

(கொழும்பு)

காணப்படும் அரசியல் நெருக்கடி நிலைமைக்கு தீர்வாக உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தற்போதைய ஜனாதிபதியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்ட வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று இரவு 8.00 மணிக்கு 23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு முதல்வருக்கு நீதிமன்றம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட மின்சார வேலைத்திட்டம் காரணமாக நீர் மற்றும் சூழல் மாசுபடுதல்களை சுட்டிக்காட்டி தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்காக வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட சிலருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியுடன் பான் கீ மூன் பேச்சு

(கொழும்பு)

இலங்கை மக்களின் ஜனநாயகத்தை பாதுகாத்து அனைத்து மக்கள் மத்தியிலும் சமாதானம், ஐக்கியம் என்பவற்றை கட்டியெழுப்ப புதிய அரசாங்கம் முன்னெடுத்து 23ஆம் பக்கம் பார்க்க....

## விசாகமடை உற்சவத்துக்கு படையினர் அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள வசாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் வைகாசி விசாக மடை உற்சவத்தை மேற்கொள்ள பலாலி பாதுகாப்புப் படைத்தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது என வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஆலயத்தில் நடைபெறவுள்ள வைகாசி விசாக மடையில் கலந்துகொள்ளவுள்ள பொது மக்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 23ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்ற கட்டிடத்தை தாக்கிய குற்றம் மேலும் 6 பேருக்கு நேற்றுப் பிணை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற கட்டிடத் தொகுதி கடந்த 20 ஆம் திகதியன்று தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 130 பேரில் 3 ஆம் பிரிவினரான 40 பேரில் 34 பேருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதோடு 6 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை யாழ்.நீதிமன்ற மேலதிக நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதியன்று யாழ்.நீதிமன்ற கட்டிடத் தொகுதி தாக்கப்பட்டமை மற்றும் அதனையொட்டி ஏற்பட்ட வன்முறைச்சம்பவங்கள் தொடர்பில் 130 பேர் பொலிஸா 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண தரப் பரீட்சை முடிவுத் திகதி இம்மாதம் 20

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஜுன் மாதம் 20 ஆம் திகதி என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

இறுதி வரை காத்திராமல் முன் கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புவதன் மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதை உறுதி செய்ய முடியும் என்றும் மாணவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

இதேவேளை விசேட தேவையுடைய மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது உரிய ஆவணங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந)

# பசிலின் வழக்கு இன்று விசாரணைக்கு!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட சந்தேக நபர்கள் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை நீதிமன்றம் இன்று ஆராயவுள்ளது.

தம்மை கைது செய்தமை சட்டவிரோதமானது என அறிவிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக்க ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன், நீதியரசர்கள் பியசாத் டெப், ரோஹினி மாரசிங்க ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவை ஆராய்ந்தது.

இதன்போது பசில் ராஜபக்ஷ சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தேசிய நிறைவேற்றுச் சபையின் தீர்மானத்திற்கு அமைய ஏற்படுத்தப்பட்டதாக கூறியுள்ளார்.

. தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கம் வகிக்கும் நபர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினருடன் பகையுணர்வை கொண்டிருப்பதாகவும் சட்டத்தரணி கூறியுள்ளார்.

அதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் சட்டவிரோத நடவடிக்கைகள் சம்பந்தமாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. அரசியல் பழிவாங்கலுக்காக மாத்திரமே அந்த விசாரணைப் பிரிவு பயன்படுத்தப்படுகிறது எனவும் சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## தேவை

யாழ்நகருக்கு அண்மையிலுள்ள போன் சொப் ஒன்றுக்கு விற்பனையாளர் (ஆண்), காசாளர் (பெண்) தேவை. யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் பிரதேசத்தவர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு:-0785210573** (651)

## தேவை

ஆரியகுள சந்தியில் அமைந்துள்ள கல்வி நிலையத்திற்கு எழுதுவினைஞர் (பெண்) தேவை.

**தொடர்புகளுக்கு:-0779707322** (650)




எமது கிளையானது இன்று

(05.06.2015)

No.7 தாவடி வீதி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய் எனும் முகவரியில் மு.ப 10 மணியளவில் திறக்கப்படவுள்ளது

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

0776914123

(சி-1169)


# தமிழ்-முஸ்லிம் மக்களிடையே காணி உரிமை தொடர்பில் சர்ச்சை

## கிழக்கிலங்கையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள மீராவோடைப் பகுதித் தமிழர்கள் தமது காணிகளை முஸ்லிம்கள் அத்துமீறி அபகரிப்பதாக தெரிவித்து அதனை தடுத்து நிறுத்தக் கோரி நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு நகரில் ஆர்பாட்டம் செய்தனர்.

மீராவோடையில் போருக்கு பின்னர் மீளக்குடியேறிய தமிழர்களுக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்ட காணிகளே முஸ்லிம்களினால் அத்துமீறி எல்லைகளை அமைத்து அபகரிக்கப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணிக்குள் 118 வருடங்கள் பழமை வாய்ந்த தமது உறுதிக்காணிகளும் இருப்பதாக முஸ்லிம் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச செயலக அதிகாரிகள் கவனக் குறைவால் காணி உரிமைகளை மாற்றிக் கொடுத்திருக்கக் கூடும் என முஸ்லிம் தரப்பினர் கூறுகின்றனர்.

வாழைச்சேனை மற்றும் ஒட்டமாவடி பிரதேசங்களின் எல்லையில் எழுந்துள்ள இந்த பிரச்சினை காரணமாக தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் அந்தப் பகுதியில் அவ்வப்போது முறுகல் நிலையும் காணப்படுகின்றது.

### அதிகாரிகளுடன் சந்திப்பு

காணி உரிமை தொடர்பான தங்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தருமாறு கோரி ஏற்கெனவே பிரதேச செயலகத்திற்கு முன்பாக போராட்டங்களை நடத்தியுள்ள போதிலும் தங்களுக்கு தீர்வு கிடைப்பதாக இல்லை என தமிழர் தரப்பு கூறுகின்றது.

நேற்று மட்டக்களப்பு நகர் பஸ் நிலையம் முன்பாக ஒன்று கூடி இவர்கள் மாவட்ட செயலகம் வரை பேரணியாக சென்று மாவட்ட செயலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த அரசாங்க அதிபர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் அவர்களை சந்தித்து உரையாடினார்

காணி சம்பந்தமான வழக்குகள் நீதிமன்றில் இருக்கும் நிலையில் வழக்கு விசாரணை முடியும் வரை எவரும் உள்ளே நுழையாதவாறு அந்த பகுதியில் பொலிஸ் காவல் கடமையில் ஈடுபடுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்க அதிபரால் அளிக்கப்பட்ட உறுதி மொழிகளையடுத்து ஆர்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (எ-11)

# இளைஞனை நாடுகடத்த அரசாங்கம் திட்டம்

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் ஒருவரை நாடு கடத்த உள்ளதாக பிரித்தானிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். 22 வயதான ஜனகன் சிவநாதன் என்ற இளைஞரே இவ்வாறு நாடு கடத்தப்பட உள்ளார்.

பிரித்தானியாவின் மோர்டன் தடுப்பு முகாமில் தற்போது ஜனகன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அரசியல் செயற்பாட்டாளரான ஜனகன் தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பாடசாலை மாணவராக இருந்த போது பத்து நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனகனின் உடல் நிலை பாதிக்கப்பட்டு ள்ளதாக அவரது சட்டத்தரணிகள் மருத்துவ ஆதாரங்களை நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர். கடுமையான உளவியல் பாதிப்புக்களினால் ஜனகன் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

ஜனகன் தற்கொலை செய்து கொள்ளவோ அல்லது சுய காயங்களை ஏற்படுத்திக்கொள்ளவோ கூடிய சாத்தியம் மிகவும் அதிகமாக காணப்படுகின்றது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், ஜனகனை நாடு கடத்துவதற்கு பிரித்தானிய அதிகாரிகள் ஆயத்தமாகி வரு கின்றனர். (எ-11)


## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்திற்கு விற்பனையில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. இரு வெற்றிடங்கள் உள்ளன. (பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது)

**லைடன் புடைவை நிலையம், 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## வருகையன்றே வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு:இலங்கையில் அனைத்துப் பிரதேசங்களிலும் எமது தொழிற்சாலையில் ஜேம், டொபி, பிஸ்கட், பால்மா, சொக்லெட், ஐஸ்கிறீம் போன்ற பிரிவுகளில் 18-50 வயது ஆண், பெண் உடனடியாக தேவை. லேபல், களஞ்சியப் பிரிவில் வேலைவாய்ப்பு. உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். நீங்கள் மாதாந்த சம்பளம் எதிர்பார்க்க தேவையில்லை. நீங்கள் நாள் சம்பளமாக பெற்று கொள்ளலாம். நாள் சம்பளம் Rs.1500 OT யுடன் மாதாந்த சம்பளம் 40,000/- மேல் வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம். நண்பர்கள், தம்பதியினர் ஆகியோர் வரும் நாளில் வேலை உண்டு.

**0712051745, 0776733588** (652)

## வேலைவாய்ப்பு

எமது பிரசித்தி பெற்ற பால்மா, பிஸ்கட், கொக்லெட் தொழிற்சாலைக்கு உடனடியாக பயிற்சியுள்ள பயிற்சியற்ற ஆண், பெண் இருபாலாரும் (வயது 18-50) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம், மாதாந்தம் சம்பளம் (25,000-35,000) மேல் நண்பர்கள், தம்பதியினர், குழுக்களாகவோ இணைந்து கொள்ளலாம். இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். இன்றே அழையுங்கள்.

**0771657473, 0770153922, 0718539136** (652)

## தேவை

கப்பலில்/ விமானத்தில் வேலை செய்ய விருப்பமா? துறைமுகம் விமான நிலைய வேலைக்கு ஆண்/பெண் உடனடியாக தேவை. உயர் சம்பளத்துடன், பின்னர் வெளிநாட்டு துறைமுகம்/ விமான நிலையங்களில் வேலை.

**இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:- 0772658954** (648)

## தேவை

மஞ்சி, மலிபன், நெஸ்லே, ரிஸ்பரி, ஏமாஸ் தொழிற்சாலைகளுக்கு ஆண்/ பெண் தேவை

18-35

35,000/- உயர் சம்பளம்

**இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:- 0772659117** (648)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செல்ஃபி

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு


துளசிதாஸ் கிருஸ்ணானந்தன்


விஜய் நிலான்


நகுல்ராஜ், சுழிபுரம்


பாலசுந்தரம் ஜெயானந்தன்


ஜேசு ஜேசு

## வகுப்புக்கள் இடைநிறுத்தம்

யாழ்.உயர் தொழில்நுட்பவியல்-நிறுவனத்தில் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆங்கில தினம் மற்றும் ATI -வார நிகழ்வுகளின் காரணமாக அன்றைய தினம் இடம்பெறவுள்ள அனைத்து பகுதிநேர வகுப்புக்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதற்கான பதில் வகுப்புக்கள் இதே நேரசூசிகை ஒழுங்கில் எதிர்வரும் 01.07.2015 அன்று இடம்பெறும். 07.06.2015வகுப்புக்கள் வழமைபோல் இடம்பறும் என நிறுவன உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் அறிவித்துள்ளார்.

(இ-3)


## அன்பு வாசகர்களே !

01.06.2015 முதல் உங்கள் வலம்புரியில்

**செல்ஃ(f)பி**

சிறந்த செல்ஃ(f)பி அனுப்புபவர்களுக்கு வாராந்தம் பரிசில்கள் உண்டு.

நீங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்
photosofvalampurii@gmail.com


## இலங்கை அகதிகள் நாடுகடத்தப்படலாம்

(கொழும்பு)

இந்தோனேசியாவில் சிறைபிடிக்கப்பட்ட இலங்கை அகதிக்ள் நாடுகடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு இணையத்தளம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அதிகாரிகளால் கடல் மார்க்கமாகவே திருப்பி அனுப்பப்பட்ட நிலையில், குறித்த அகதிகளின் படகு இந்தோனேசிய கடற்பரப்பில் வைத்து மீட்கப்பட்டது.

இதில் 54 இலங்கையர்களுடன் பங்களாதேஷ் மற்றும் மியன்மாரைச் சேர்ந்தவர்களென மொத்தமாக 65 பேர் பயணித்திருந்தனர்.

அவர்கள் இந்தோனேசியாவின் குடிவரவுத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், விரைவில் அவரவர்களின் நாடுகளுக்கு நாடுகடத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தோனேசிய அரசாங்கம் இது குறித்து எதனையும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-5)


## அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு 01.06.2015 முதல்

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampuriijaffna@gmail.com


## இராசி பலன்

05.06.2015
(வைகாசி 22, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
திருதியை முன்னிரவு 7.24 மணிவரை
பூராடம் முன்னிரவு 7.49 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
சர்வதேச சுற்றாடல் தினம்

வளவன்

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்

**மேடம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** இல்லத்தில் இனிய சம்பவமொன்று நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திக்ள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.

**சிம்மம்** பிள்ளைகள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், ஆம்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்கள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுற்றுச்சூழல் தினம் - யூன் 5

ஏழு பில்லியன் கனவுகள்...
ஒரு கிரகம்...
கவனத்தோடு நுகர்வோம்!

உலக சனத்தொகை **7** பில்லியன்.
இயற்கை வளங்களை நுகரும் கதி தற்போது உள்ளதைப்போன்றே தொடருமாயின், 2050ஆம் ஆண்டில்
உலக சனத்தொகை **9** பில்லியனை எட்டும்போது
வளங்களை வழங்க **3** பூமிகள் தேவை.

## இருப்பதோ ஒரேயொரு பூமி!




## இயற்கை வளங்களை அளவோடு நுகர்ந்து வளமோடு வாழ்வோம்!

விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி,
கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல்,
நீர் வழங்கல், நீர்ப்பாசனம்
மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடக்கு மாகாணம்

(C-1173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. நாகலிங்கம் சிவநேசன்**
B.A. Dip.in Ed (Merit), Med, J.P, SLPS-1
**பிரதீபா பிரபா**

யா/ தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபரும் எமது கடவுள் சந்நிதி ஆச்சிரமத்தின் நிர்வாக சபை உறுப்பினருமான திரு. நாகலிங்கம் சிவநேசன் அவர்கள் 05.04.2011 இல் இருந்து இலங்கை அதிபர் சேவை தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று பல்லாண்டு காலம் ஆனந்தமாய் வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

கடவுள் சந்நிதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். (635) நிர்வாக சபையும் அடியார்களும்.


## ஜூலை 6 ஆம் திகதியே மீள்பரீட்சை நடைபெறும்

ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையத் தவறியவர்கள் அல்லது நூனசித்தி பெற்றவர்களுக்கான மீள் பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதிதொடக்கம் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார். நேற்றைய தினம் வலம்புரியில் இம்மாதம் 6ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டதை அடுத்த மாதம் 6 ஆம் திகதி யென திருத்திக்கொள்ளுமாறும் அதிபர் அறிவித்துள்ளார். (இ-3)


**Computerized Accounting Services**

கணனி மூலமான தினசரி காசேட்டு பேரேட்டு பதிவு
மாதாந்த பரீட்சை மீதி
மாதாந்த ஐந்தொகை
மாதாந்த இலாப நட்ட கணக்கு
மாதாந்த காசுப் பாய்ச்சல் கூற்று
மாதாந்த வங்கி கணக்கிணக்கக் கூற்று
முகாமைக்குத் தேவையான தகவல்கள்
தினசரி, மாதாந்த வருடாந்த மேற்குறிப்பிட்ட கணக்கியல் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

திருநெல்வெலி ,யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:-0766693341


## நாளொன்றுக்கு 2பேர் வீதம் பலி

நாளொன்றுக்கு இரண்டு பேர் வீதம் நீரிழ் மூழ்கி பலியாவதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

தெதுருஓய - பிங்கிரிய பிரதேசத்தில் நீராடச் சென்ற இரண்டு இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை நீரில் மூழ்கி பலியாகினர். இவர்கள் பிங்கிரியவைச் சேர்ந்த 15 மற்றும் 17 வய தான சிறுவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த வருடத்தின் முதல் நான்கு மாத ங்களில் மாத்திரம் 345 பேர் நீரில் மூழ்கி பலியானதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-5)




வண்ணை திருவருள்மிகு
**ஸ்ரீ வீரமாகாளியம்பாள் ஆலய**
**வருடாந்த கொடியேற்ற பெருந்திருவிழா - 07.06.2015**

நாளை மறுதினம் (07.06.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அகில இலங்கை இந்திய புகழ்பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசைமாரி முழக்கத்துடன் கொடியேற்றப் பெருந் திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளது. அம்பிகை அடியவர்கள் அனைவரும் அலைஅலையாக வருகை தந்து அம்பிகையின் கொடியேற்ற வைபவத்திலும் நண்பகல் நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் (அன்னதானத்திலும்) கலந்து சிறப்பித்து அம்பிகையின் அருட்கடாட்சத்தினைப் பெற வாரீர் வாரீர்.

கொடியேற்றப் பெருந்திருவிழா உபயகாரர்கள்

கிருஷ்ணா ஜீவல்லறி
இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

கிருஷ்ணா அடைவுகடை,
இல. 370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1168)


## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்.வண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீவீர கத்திவிநாயகர் தேவஸ்தானத்தின் மன்மத வருட திவ்ய பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் எதிர் வரும் 10ஆம் திகதி புதன்கிழமை மு.ப.10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் 24ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ-7)


**Hatton National Bank**

**அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை, மன்னார், வவுனியா, நானாட்டான், குருமன்காடு ஆகிய கிளைகளில் 30.04.2014 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 08.06.2015 தொடக்கம் 11.06.2015 (திங்கள்- வியாழன்) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி-1166) **ஹற்றன் நஷனல் வங்கி.**



**இவர்களுக்கு மணமகள் தேவை** — **கல்யாண மாலை** — **இவர்களுக்கு மணமகன் தேவை**

**மணமகள் தேவை**

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 33 1/4 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/751

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 02 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MSC/ பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/756

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 26 3/4 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L சுவிஸ் NOT PR
தொ.இ: B/758

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 36 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA, MA/ ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/763

**மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 33 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1315

பிறப்பு: 1979 RC
நட்சத்திரம்: சதயம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
தொ.இ: G/1316

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 29
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/1319

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 5 1/4 உயரம்: 160cm
தகைமை/தொழில்: B.COM, M.COM/ ஆசிரியர்
தொ.இ: G/1323

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com



## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் உள்ள வலம்புரியின் உப அலுவலகத்தில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

- அலுவலக உத்தியோகத்தர் (ஆண்)
- கணனி இயக்குநர் (ஆண்)
- அலுவலகப் பணியாளர் (ஆண்)

**தகைமை**

- கல்வித் தகைமை: க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- வயது: 25-35
- உப அலுவலகம் அமைந்துள்ள இடத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி**
**இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
-பொது முகாமையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போதைப்பொருள் எதிர்ப்பு' கொடிவார சேமிப்பில் நாடளாவிய ரீதியில் யாழ்.மாவட்டம் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

**அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போதைப்பொருள் எதிர்ப்பு கொடிவார சேமிப்பில் யாழ்.மாவட்டம் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளது. அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தினைப் பெற்றமைக்காக யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.**

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இந்த மாதம் முதலாம் திகதி ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வளாகத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பாக வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் கே.மகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 2014 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்ட போதைப்பொருள் எதிர்ப்பு கொடி தினவார சேமிப்பில் யாழ். மாவட்டத்தில் இருந்து 11.7 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

இதில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் அதிகூடிய சேமிப்பாக 2.3 மில்லியன் ரூபா சேகரிக்கப் பட்டுள்ளது.

கூடுதலான சேமிப்பில் ஈடுபட்ட வங்கியாக சாவகச்சேரி சமுர்த்தி வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கௌரவிப்பு நிகழ்வில் சாவகச்சேரி சமுர்த்தி வங்கி முகாமையாளர் கே.நகுலதாஸ், யாழ்ப்பாண சமுர்த்தி உத்தியோகத்தர் ஜெகதீசன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.தினேஷ் ஆகியோர் ஜனாதிபதியிடம் இருந்து சான்றிதழ்களைப் பெற்றிருந்தனர்.

இந்த வருடத்துக்கான கொடி தின வாரம் மேமாதம் 31 ஆம் திகதியில் இருந்து ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

இதில் சேகரிக்கப்படும் நிதியிலிருந்து சமுர்த்தி பயனாளிக்கு துவிச்சக்கரவண்டிகள், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிகள் வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்குதல் போன்ற செயற்பாடுகளை செய்து வருகின்றோம்.

இந்தச் சேமிப்பு மது/புகைத்தல் போன்ற செயற்பாடுகளைத் தடை செய்து மக்களுக்கு விழிப்புணர்வை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட செயற்றிட்டம்ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு மையம் நடத்தும் விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் தென்மராட்சி பிரதேச கிராம சேவையாளர்களுக்கும் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக டாக்டர் ஈ.சிவசங்கர் மற்றும் டாக்டர் எஸ்.சிவரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-7-29)

## சில்லறைப் பிரச்சினையினைப்போக்க மக்களிடம் மத்திய வங்கி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் சில்லறை நாணயக் குற்றிகளின் தட்டுப்பாட்டிற்கு மக்கள் பொறுப்புடன் நாணய மீள் சுழற்சிக்கு உதவினால் மட்டுமே யாழில் சில்லறை நாணய தட்டுப்பாட்டை இல்லாமல் செய்ய முடியும் என இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சண்.குறிஞ்சிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் சில்லறை நாணய சுழற்சி முறை மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. இதற்கு மத்திய வங்கி தன்னாலான முயற்சிகளை எடுத்து வந்துள்ளது. அண்மையில் வடமாகாணத்தில் புதிய நாணயக் குற்றிகளை வெளியிட்டிருந்தது.

நாணயக் குற்றிகளை சிறிய செலவில் உருவாக்கிவிட முடியாது. அதற்குரிய பாரிய செலவுகளை மக்களுடைய வரிப் பணத்தில் இருந்து தான் உருவாக்குகின்றார்கள். மத்திய வங்கி அளவீட்டு அடிப்படையில் நாணயக் குற்றிகளை தயாரித்து பாவனைக்கு விடுகின்றது.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் குபேரன் சிலையை சுற்றி மிகப் பெரிய அளவிலான நாணயக் குற்றிகள் இருக்கின்றன. அதேபோல ஆலயங்களில் சில்லறை நாணயக் குற்றிகள் தேங்கி இருப்பதன் காரணமாக நாணயக் குற்றிகளுக்கு மிகப் பெரிய தட்டுப்பாடு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று அண்மைக் காலங்களில் 18 தொன் இலங்கை நாணயக் குற்றிகள் இந்தியாவில் உள்ள கோவில்களில் இருப்பதாக அறிய முடிகிறது. இது பக்தர்கள் மிகப் பாரிய அளவிலான நாணயக் குற்றிகளை காணிக்கையாக அங்கு சென்று செலுத்துகிறார்கள்.

இவ்வாறு பல இடங்களில் நாணயக் குற்றிகள் மீள் சுழற்சிக்கு உட்படாமல் இருக்கின்றது.

எனவே பொதுமக்கள் நாணயக் குற்றிகளை சுழற்சிக்கு விடும் பொறுப்பினை ஏற்று செயற்படுவது மிக அவசியமான விடயம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




## சமுர்த்தி தொடர்பில் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)


சமுர்த்தி பயனாளிகளின் நிலையான வைப்புகளை பயன்படுத்தி சமுர்த்தி நலத்திட்டத்தில் உள்ளடங்காதவர்களுக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபா வரையில் கடன் வழங்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போதைய சமுர்த்தி அமைச்சு இவ்வாறு கடன்களை வழங்குவதாக எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா குற்றஞ்சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வின் போதே எதிர்க்கட்சி தலைவர் இதனை தெரிவித்தார். (இ-5

## முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட நபர் சாவகச்சேரியில் அமைதிவழிப்போராட்டம்

(சாவகச்சேரி)



சமூகசேவைகள் திணைக்களத்தினால் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தில் மருத்துவச் சான்றிதழினை வழங்க மறுத்த சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகருக்கெதிராக முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர் தனித்து அமைதிவழிப் போராட்டம் ஒன்றை வைத்தியசாலைக்கு முன்பாபாக நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை மேற்கொண்டிருந்தார்.

சாவகச்சேரி கற்குளியைச் சேர்ந்த அகத்தியர் ஆனந்தராஜா (வயது-44) என்பவரே மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். (இ-29)

## கட்டைவேலி ப.நோ.கூ.ச. ஊழியர்கள் 33பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கல்

(கரணவாய்)

நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றிய 33 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

12 வருடங்களாக பணியாற்றிய 18 ஊழியர்களுக்கும் 20 வருடங்களாக பணியாற்றிய 15 ஊழியர்களுக்கும் இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊழியர்களுக்கு 30 சதவீத சம்பள அதிகரிப்பும் வழங்கப் பட்டுள்ளது.இது குறித்து நெல்லியடி-கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.செல்வ ராசா தெரிவிக்கையில்,

23ஆம் நிலையில் இருந்த கூட்டுறவுச்சங்கத்தை கடந்த மூன்று வருடகடின உழைப்பினால் 7 ஆவது இடத்திற்கு கொண்டு வந்துள்ளோம். அத்துடன் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்ததுடன் சங்கத்திற்கு இருந்த கடன் தொகையான 80 இலட்சத்திற்கும் அதிகமான கடன் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3-60)

## சத்ய சாயி சேவா நிலையத்தின் 30ஆவது ஆண்டு விழா நாளை

உரும்பிராய் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தின் 30 ஆவது ஆண்டு விழா நாளை 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 6.30மணி வரை சத்ய சாயி சேவா நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்தலைமையுரையை வடபிராந்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழுத்தலைவர் ஸ்ரீ.எஸ். ஆர்.சரவணபவன், சிறப்புரைகளை வடபிராந்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு முன்னாள் தலைவர் ஸ்ரீ.வே.சேனாதிராசா மற்றும் ஸ்ரீ.ஆர்.வசந்தசேனன் ஆகியோரின் உரைகள் இடம் பெறவுள்ளன.

மாலை நிகழ்வுகளில் வரவேற்பு நடனம், காவடி நடனம், நாடகம், சிறப்புரை வாத்திய இசை,பேச்சு மற்றும் இசை ஆராதனை என்பன இடம்பெறவுள்ளன. (இ-3-7)

## சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படமாட்டார்கள்

யாழ்.நகர் பகுதியில் கடந்த மே மாதம் 20ஆம் திகதி கலவரத்தில் ஈடுபட்டமை மற்றும் யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டுக்களின்கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் 45 சந்தேக நபர்களில் எதிர்வரும் 5, 8ஆம் திகதிகளில் பிணைக்கட்டளைக்காக திகதியிடப்பட்ட எந்தவொரு சந்தேக நபரும் அன்றையதினம் நீதிமன்றின் முன் உட்படுத்தப்படமாட்டார்கள் என யாழ்.நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் [illegible] தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதியிலிருந்து விளக்கமறியலில் இருந்த 43 சந்தேக நபர்களும் கடந்த 30ஆம் திகதியில் இருந்து விளக்கமறியலில் இருக்கும் 2 சந்தேகநபர்களும் நேற்று முன்தினம் மன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

இவர்களுக்கு எதிராக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. நீதிமன்றம் மற்றும் 2 சிறைச்சாலை வாகனங்களை சேதமாக்கியமை, பொலிஸாரை கடமை செய்யவிடாமல் தடுத்தமை, நீதிமன்ற ஊழியர்கள், பொலிஸாருக்கு உயிர் அச்சுறுத்தல் மற்றும் சட்டவிரோத கூட்டங்களில் கலந்து கொண்டமை போன்ற குற்றங்களுக்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

சந்தேக நபர்களில் ஒருவருக்கு 6 ஆம் திகதி திறந்த பல்கலைக் கழகத்தில் பரீட்சைக்காக பதிவினை மேற்கொள்ளவேண்டி இருப்பதாகக் கூறியதற்கு அமைய அவருடன் இணைந்த மற்றும் ஒரு மாணவருக்கும் எதிர்வரும் 5ஆம் தகதி பிணைக் கட்டளைக்காக திகதியிடப்பட்டுள்ளது.

அத்துடன் 4 மாணவர்களுக்கும் இந்திய பிரஜைக்கும் பிணையில் விடுவதற்கு ஆட்சேபனை இருக்கின்றதா என பொலிஸார் தெரிவிப்பதற்காக எதிர்வரும் 8ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது. (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்-ஜயரட்ன

(கொழும்பு)

அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள இந்த நெருக்கடியான நிலையில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது. 1951ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார்.


ஐரோப்பிய கலாசாரத்திற்கு அடிமையாகாது இலங்கையின் தனித்துவத்தை பேணி, சுயாதீனமாக மக்கள் இயங்க வேண்டும் என்பதற்காக கட்சி நிறுவப்பட்டது.

அதன் பின்னர் சிறிமாவோ பண்டா ரநாயக்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் நாட்டை அபிவிருத்தி செய்தனர். மகிந்த ராஜபக்ஷ முப்பது ஆண்டுகளாக நீடித்து வந்த யுத்தத்தை இல்லாதொழித்தார்.

நாட்டு மக்களும், நாடும் இந்த சேவைகளை மதிக்கின்றனர். அனைவரும் நாட்டுக்கும் கட்சிக்கும் பாரிய அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளனர். அனைவரிடமும் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் வித்தியாசமாகவே சிந்திக்கின்றனர்.

எல்லோரும் ஒரேவிதமாக சிந்தித்து ஒரே விதமாக செயற்படமாட்டார்கள் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். அனைத்து தரப்பினரும் இந்த தருணத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென டி.எம். ஜயரட்ன கோரியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த மற்றும் கட்சித் தலைமைக்கு கடிதம் ஊடாக இணைந்து செயற்படுமாறு கோரியுள்ளார். (இ-5)




# ‘போர்க்களத்தில் ஒரு பூ’ படத்தடைக்கு கண்டனம்

## பெண்கள் அமைப்பு

(சென்னை)

**போர்க்களத்தில் ஒரு பூ என்ற படத்திற்கு தணிக்கை குழு தடை விதித்துள்ளமைக்கு பெண்கள் அமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ள அதேவேளை கடும் கண்டனமும் வெளியிடப்பட்டுள்ளது.**

இசைப்பிரியாவின் படுகொலையினை மையமாக வைத்து "போர்களத்தில் ஒரு பூ" என்ற திரைப் படத்தினை கணேசன் தயாரித்துள்ளார்.

இப்படத்திற்கு கடந்த சில நாட்களுக்கு முன் இந்தியத் தணிக்கை குழு தடை விதித்துள்ளது. இத்தடையை கண்டித்து சென்னையில் பெண்கள் அமைப்பு சார்பாக நேற்று முந்தினம் பத்திரிகையாளர் சந்திப்பு இடம் பெற்றது.

பெண் ஊடகவியலாளருக்கு கொடுமை திரையிட அனுமதி மறுப்பதா? இலங்கையில் நடந்த இன அழிப்புப் போரில் வடக்கு மாகாணத்தில், கலைஞராகவும், ஊடகசெயற்பாட்டாளருமாக இருந்த இளம் பெண் கைது செய்யப்பட்டு, படுகொலையானது உலகறிந்த உண்மைச்சம்பவம்!

உண்மைச் சம்பவத்தை திரைப்படமாக்கினால் பிழையா? ஐ. நா. மனித உரிமைக் கழகமே தனது தீர்மானங்கள் மூலம் " விசா ரணை செய்யப்படும் போர்க்கு ற்றங்கள்" படமாகி வரக்கூடாதா? இந்திய அரசு இரண்டு முறை ஐநா மனித உரிமைக் கழகத்தில், இலங்கை போர்க் குற்றங்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டு மென ஆதரவு கொடுத்த நிகழ்வுகள் படமாகி வரக்கூடாதா? உலக திரைப் படங்களில் எதனை "போர் நடந்த நிகழ்வுகள் " வெளிவந்துள்ளன?

"போர்க்களத்தில் ஒரு பூ" என்ற படம்என்ன தவறு செய்தது? ஒரு இளம் பெண் பாதிக்கப்பட்டதை சித்திரித்து மக்கள் மத்தியில் கொண்டு வர வேண்டிய மனித உரிமைக் கடமை தானே? உண்மைகளைத் தெரிந்து கொள்ள மக்களுக்கும் "அறியும் உரிமை" வேண்டுமல்லவா?

"சான்றிதழ்" தருவது தானே "தணிக்கை குழு" பணி? சான்றிதழ் மறுப்பது எப்படி சரி? " பெண்கள் மீதான கொடுமையை" சித்திரிக்க இது போன்ற படங்களுக்கும் "சான்றிதழ்" அளிக்க வேண்டுகிறோம்! பல சமூக சிந்தனையாளர்கள் இந்த வேண்டுகோளில் கையெழுத்திட்டு இந்தப் படத்திற்கு சான்றிதழ் வழங்கக் கோரியுள்ளனர். (இ-5)

# புகை நாற்றத்தை என் வாயிலிருந்து குறைத்தால்...

- மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் குறைதல்
- இரத்தத்தில்கொழுப்புகுறைதல்
- மூளையினுள் இரத்தப் பெருக்கு குறைதல்
- கால், கை விரல்களில் எரிவுடன் கூடிய நோவு குறைதல்
- நுரையீரல் பாதிப்புக்கள் குறைதல்
- இருமல், முட்டு குறைதல்
- வாய், உதடு,இரப்பை, நுரையீரல், குடல், சிறுநீர்ப்பை என்பவற்றில் ஏற்படும் புற்றுநோய்கள் குறைதல்
- இரத்தத்தில்காபன்மொனோக்சைட்டு குறைதல்
- குறைப்பிரசவம் குறைதல்

நிறை குறைந்த குழந்தைகள் பிறப்பது (IUGR) குறைதல்

- கர்ப்பிணித்தாயின் உயர் குருதியமுக்கம் குறைதல்
- என்புகளின் தேய்மானம் குறைதல்
- மறைமுகப் புகைத்தலினால் குடும்ப அங்கத்தவர்களின் இறப்புக்கள் குறைதல்
- வயிறு, குடல், புண்கள்- வேதனைகள் குறைதல்

போன்ற நோய்கள், வேத னைகள் குறைந்து வாழ்வின் தரம் கூடும். வீட்டிலும் சமூகத்திலும் சந்தோசம் அதிகரிக்கும்.

இவை மட்டுமா? இவற்றிற்கு மேலதிகமாக உடனடியாக ஒருவரில் ஏற்படும் மாற்றங்களையும் பாருங்கள்

- முதியதோற்றம்மறைந்துபழைய இளமை தோற்றம் மீளப்பெறல்
- கறுப்பு நிறமாகிய உதடுகள் பழைய நிலைக்கு திரும்புதல்
- மஞ்சள் காவிபடிந்த பற்கள் பழைய இயல்பு நிலைக்கு மாறுதல்
- சகிக்கமுடியாத நாற்றம்- சுவாச நாற்றம் அற்றுப்போதல்
- உணவில் விருப்பு ஏற்படுதல்
- மெலிந்தஉடல்சுற்றுதேறிவருதல்

பாலியல் பலவீனம் குறைந்து வீரியத்தன்மை பெறல்

- குழந்தைப் பாக்கியமின்மை குறை ந்து குழந்தைகள் கிடைக்கும் தன்மை அதிகரித்தல்
- தாம்பத்திய உறவில் இருந்த கஷ்டங்கள் நீங்குதல்

போன்ற பல நன்மைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். புகைத் தலை குறைப்பதால் ஏற்படும் நன்மைகளை அனுபவிக்க நாம் ஏன் மறுக்கவேண்டும்? காசு கொடுத்து கல்லறைக்கு ஏன் சீக்கிரம் நாம் செல்லவேண்டும்.

புகைத்தலிலிருந்து விடுபடுவதற்கு

- புகைப்பதில்லை என எடுத்துக் கொண்ட நல்ல முடிவினை பேண உறுதியான மனத்திடம் வேண்டும்
- நல்லநண்பர்கள் வட்டத்தினை பேணிக்கொள்ளுதல்
- ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுதல்
- நல்ல பொழுது போக்கொன்றினை ஏற்படுத்திக்கொள்ளுதல்
- தினமும்உடல்அப்பியாசங்கள் செய்தல்
- ஆன்மீகச்செயற்பாடுகளில்ஈடுபடுவதால் மனம் அலைபாய்வதைத் தடுத்தல்
- முடியுமாயின் தியான முறையில் ஈடுபடுதல்

போன்ற செயன்முறைகளை பின்பற்றுவதனால் இந்தக் கொடிய பழக்கத்திலிருந்து மீண்டெழ முடியும்.

புகைத்தல் தனியொருவரை மட்டும் பாதிப்பதில்லை. வீட்டிலுள்ள அவரின் அன்புக்குரியவர்கள், தொழிலிடங்களில்கூடவே இருந்து தொழில் புரிபவர்கள் என அவர் சார்ந்த சமூகத்தையே பாதிக்கிறது.

புகைப்பழக்கத்தில் ஈடுபடுபவர்கள் இலகுவில் ஏனைய கூடாத பழக்கங்களையும் பழகிக்கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகம். போதைப் பொருள் பாவனை, மதுப்பழக்கம், தகாத பாலியல் தொடர்புகள் என இந்த நச்சுவட்டம்பெருத்துக்கொண்டே செல்லும். இதன் விளைவாக வீட்டில் பணம் திருடுதல், சிறுசிறு திருட்டுக்களில் ஈடுபடுதல், குடும்ப வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் நடத்தைப் பிறழ்வுகள், பாலியல் வன்புணர்வுகள், கொலை என்பன ஏற்பட வாய்ப்புகள் ஏற்படுகின்றது.

புகையின்அருபக்கரங்கள்புகைப்பவனின் கழுத்தை நோக்கி நீண்டு நெரிப்பது மட்டுமல்லாது அவன் சார் சமூகத்தினையும் நோக்கி நீண்டு அதனையும் அழிக்க எத்தனிக்கும். யதார்த்த நிகழ்வுகளை இன்று நாம் கண்கூடாகவே காண்கின்றோம்.

புகையின் வலைக்குள் தினம் தினம் பலநூறு இளைஞர்கள் வீட்டில் பூச்சிகளாய் விழுந்துகொண்டிருப்பதை பார்க்கும்போது மனம் மிக நோகிறது. இவர்களை எப்படி திருத்துவது? யாரால் இவர்களை திருத்த முடியும்? என்ற கேள்விகள் தான் மனதில் மீண்டும் மீண்டும் எதிரொலித்து நிற்கின்றன.

தாமே உணர்ந்து புகையிலிருந்து தள்ளி நிற்காதவரை இவர்களை திருத்திட முடியாது. பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியர் சில நிமிடங்களேனும் மாணவர்களுக்குச் சில நல்வார்த்தைகள்கூறி கற்றதன்வழி நடக்க வலியுறுத்திட வேண்டும்.

மதிப்புக்குரியசமயப்பெரியார்கள், பௌராணிகர்கள், சொற் பொழிவாளர்கள், பிரசங்கம் செய்வோர் என சமூகத்தின் பலமட்டத் தினரும் தமக்கு ஆர்வத்துடன் காது கொடுப்போருக்கு சில நிமிடங்களேனும் புகையை விலக்கிட சில நல்வார்த்தைகள் பகிர்ந்திட வேண்டும். பாடசாலைக்கு அருகிலுள்ள வர்த்தகப் பெருமக்களாவது புகை பொருட்களை விற்காது பெரு மனதுடன் முன்வந்து உதவிட வேண்டும்.

*இளைஞர்களே வாருங்கள்!!*
*புகையற்ற எதிர்காலத்தை*
*நோக்கிப் பயணிப்போம்*

Dr.பொ.ஜெசிதரன்
(MBBS, DFM)

**புகைத்தலுக்கு எதிரான வாரத்தை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னி இறுதி யுத்தத்தின் போது பொஸ்பரசு குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது உண்மை

## நீதிமன்ற வாக்குமூலத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி தெரிவிப்பு

இறுதி யுத்தத்தில் பொஸ்பரசு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது உண்மை எனவும் இக்குண்டுத்தாக்குதலுக்கு தான் ஆளாகியுள்ளதாகவும் முல்லைத்தீவு நீதிமன்றில் வடமாகாண சபை உறுப்பினரும் சரணடைந்த காணாமற்போன வழக்கின் மனுதாரருமான திருமதி அனந்தி சசிதரன் வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

இறுதிப்போரில் சரணடைந்த காணாமற்போனவர்கள் தொடர்பில் ஆட்கொணர்வு வழக்கொன்றை அவர்களது உறவினர்கள் வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா மேல்நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில் சம்பவம் நடைபெற்ற இடம் முல்லைத்தீவு என்பதனால் இவ்வழக்கின் மனுதாரர்களை சாட்சியங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல்நீதிமன்றம் முல்லைத்தீவு நீதிமன்றுக்கு பணித்திருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகளில் ஏற்கனவே மூவரின் வாக்குமூலங்கள் பதியப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் மீண்டும் முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் நான்காவதாக திருமதி அனந்தி சசிதரனின் வாக்குமூலம் பதியப்பட்டது.

அவர் தனது வாக்குமூலத்தில் இலங்கை அரசு இறுதி யுத்தத்தின் போது பிரகடனப்படுத்தியிருந்த பாதுகாப்பு வலயத்திற்குள் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

பொஸ்பரஸ் குண்டுத்தாக்குதல்களும் நடத்தப்பட்டிருந்தன. இக்குண்டுத் தாக்குதலுக்கு நானும் இலக்காகியிருந்தேன்.

இறுதிப்போரின்போது 2009 மே மாதம் 16ஆம் திகதியன்று தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் மகள் கனிமொழி விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரான எழிலனோடு தொலைபேசியில் உரையாடியதாகவும் அப்போது அவர் எம்மை சரணடையுமாறும் கூறியிருந்தார்.

இதன்பின்னரே நாம் சரணடைந்தோம். சரணடையும் போது இராணுவ உயர் அதிகாரிகள் இருந்ததாகவும் சரணடைந்தவர்கள் காணாமல் போனமைக்கு அரசும் இராணுவமும்தான் பொறுப்பென தனது வாக்கு மூலத்தில் கூறியிருந்தார். (2-4)




# பேருந்தும் மோட்டார் சைக்கிளும் விபத்து; மூவர் வைத்தியசாலையில்





(பனிக்கன்குளம்)

பேருந்தும் அபான்ஸ் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயம் அடைந்தனர்.

இதில அபான்ஸ் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயம் அடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

பேருந்தின் சாரதி அடிகாயங்களுக்குள்ளான நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த பேருந்து ஒன்று புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவு நோக்கி வந்து கொண்டிருந்த அபான்ஸ் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதில் குறித்த வாகனம் வீதியோரம் நின்ற பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் முதலாம் வட்டாரம் பொன்னகர் முள்ளியவளையைச் சேர்ந்த தர்மராசா கோபி, அதேவட்டாரத்தைச் சேர்ந்த முத்தையா தனகோடி, இரத்தினசிங்கம் ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டனர். (2-281)

# கிராமங்களின் தேவைகள் குறித்து டக்ளஸ் ஆராய்வு

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களுக்கு சென்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அம்மாவட்ட மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக செயலாளர் நாயகம் அண்மையில் இவ்விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

முன்பதாக ஓமந்தை கள்ளிக்குளம் கிராமத்திற்குச் சென்ற அவர் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

குறிப்பாக கருங்காலிக்குளம் அ.த.க. பாடசாலையினை தரம் உயர்த்துவதன் அவசியம். சுயதொழில் வாய்ப்பு. வீடமைப்பு வசதி. சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் தொடர்பில் மக்கள் எடுத்து விளக்கினர்.

இதேபோன்று வவுனியா நகர்ப்பகுதியில் மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றும் இடம்பெற்றிருந்தது.

இச்சந்திப்பிலும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இதனையடுத்து கூமாங்குளம் கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம் மக்களுடன் கலந்துரையாடி அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன் பிரகாரம் சிறிராமபுரம் காத்தார்சின்னக்குளம் கிராம மக்களையும் சந்தித்திருந்தார்.

இதன்போதும் மக்கள் தாம் எதிர்நோக்கும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக செயலாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தினர்.

குறிப்பாக சுயதொழில்வாய்ப்பு. மின்சாரம். சமுர்த்தி உதவித்திட்டம். வீடமைப்புவசதி. கல்வி. சுகாதாரம் உள்ளிட்டவற்றின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் எடுத்துரைத்தனர்.

குறித்த இச்சந்திப்புக்களின் போது தற்கால அரசியல் நிலவரம் தொடர்பாக டக்ளஸ் தேவனாந்தா மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.(2)

# வற்றாப்பளை பிரதான வீதியை போக்குவரத்துக்கு திறந்து விடுக

## பயணிகள், பொதுமக்கள் கோரிக்கை

(முள்ளியவளை)


வற்றாப்பளைக்கு செல்லும் பிரதான வீதியை நிரந்தரமாக மக்கள் பாவனைக்கு திறந்து விட வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வற்றாப்பளை பொங்கலை முன்னிட்டு புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாபிலவினூடாக வற்றாப்பளைக்கு செல்லும் பிரதான வீதியை இராணுவத்தினர் அன்றையதினம் மட்டுமே போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியிருந்தனர்.

ஆனால் சாதாரண நாட்களில் இப்பிரதான வீதிக்கு சமாந்தரமாக அமைக்கப்பட்டுள்ள சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரமுடைய காட்டுப் பிரதேசத்தினூடாகவே மக்கள் பயணிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

எனவே பொங்கலுக்கு தற்காலிகமாக திறக்கப்பட்ட இப்பிரதான பாதையை இராணுவத்தினர் நிரந்தரமாக மக்கள் பாவனைக்கு திறந்துவிட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது. குறித்த வீதியின் இரு பக்கங்களும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (2-302)





முன்பள்ளி ஆசிரியர்களுக்கான துவிச்சக்கரவண்டி கள் வழங்கும் நிகழ்வின் ஆறாவது நிகழ்ச்சித்திட்டம் முள்ளியவளை தெற்கு சரஸ்வதி முன்பள்ளியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக புகைத்தல் தினத்தையொட்டி

# மாணவர்கள் பங்கேற்ற புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு கண்டனப் பேரணி

(பனிக்கன்குளம்)

உலக புகைத்தல் தினத்தையொட்டி, புகைத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்டனப் பேரணியொன்று முள்ளியவளை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இக்கண்டனப் பேரணியானது நேற்று காலை 9 மணிக்கு மு/வித்தியானந்தா கல்லூரி முன்றிலில் ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வரை சென்று அங்கிருந்து முள்ளியவளை பொலிஸ் நிலையத்தை சென்றடைந்தது.

இப்பேரணியில் மு/வித்தியானந்தா கல்லூரி, மு/கலைமகள் வித்தியாலயம், மு/முள்ளியவளை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, மு/தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் புகைத்தல் எதிர்ப்புச் சித்திரங்கள், வாசகங்கள் எழுதிய பதாகைகள் என்பவற்றை தாங்கியவாறு கலந்து கொண்டனர்.





முள்ளியவளை பொலிஸ் நிலையத்தை பேரணி சென்றடைந்ததும் மாணவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட புகைத்தல் எதிர்ப்புச் சித்திரங்கள், வாசகங்கள் ஆகியவற்றில் சிறந்த 10 ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு பேரணியின் முடிவில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிநிதிகள் ஆகியோரால் பரிசில்கள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-281)

# வவு.தபால் நிலையத்திற்கு உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு கோரி அடையாள வேலைநிறுத்தம்

வவுனியா பிரதான தபால் நிலைய உத்தியோகத்தர்கள் தமது அலுவலகத்திற்கு தேவையான உத்தியோகத்தர்களை நியமிக்கக் கோரி நேற்று முன்தினம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா தபால் நிலையத்தில் 21 உத்தியோகத்தர்கள் தபால் முத்திரை வழங்குதல், மின்சார கட்டணங்கள் பெறுதல், பதிவு தபாலினை ஏற்றுக் கொள்ளல் உள்ளிட்ட அலுவலக வேலைகளுக்கு தேவையான நிலையில் நீண்டகாலமாக 7 உத்தியோகத்தர்களே கடமையாற்றி வருகின்றனர்.

இது தொடர்பில் குறித்த திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆதலால் தமது அலுவலகத்திற்கு தேவையான உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்பக்கோரி அடையாள வேலை நிறுத்தத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்த அடையாள வேலை நிறுத்தத்தால் தபால் நிலையத்திற்கு வருகைதந்த பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை தபாலகத்தில் ஆளணி பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யுமாறு பலகாலமாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஆளணி பற்றாக் குறையினால் ஒருவர் 15 மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டியநிலைகாணப்படுகின்றது. வவுனியா நகருக்கு வெளியில் வசிப்பவர்கள் காலை 5 மணிக்கு கடமைக்கு சென்று இரவு 8 மணிக்கு கடமையை முடிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் பெண் அரச உத்தியோகத்தர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (2-250)

## திருக்கேதீச்சர ஆலய

## பாலாலய குடமுழுக்கு பெருவிழா

(மன்னார்)

மன்னார் மாவட்ட மாதோட்ட சிவபூமி நன்னகர் அருள்மிகு கௌரி இணை திருக்கேதீச்சரநாதர் ஆலய பாலாலய குடமுழுக்குப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப.10.30 மணிவரையுள்ள நேரத்தில் நடைபெறவுள்ளது.

இப்பெருவிழாவில் அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு அருளைப்பெற வேண்டுமென இவ்வாலய திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர். (2)




## 1 சீ தரப்பாடசாலையாக இயங்குவதற்கு அனுமதி

முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தண்ணீரூற்று முஸ்லிம் மகாவித்தியாலயம் மீண்டும் 1 சீ தரப்பாட சாலையாக இயங்குவதற்கு மாகாண கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என பாடசாலையின் அதிபர் ஏ.சி. ரியாஸ். தெரிவித்தார்.இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் குறித்த பாடசாலை தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயம் என்ற பெயரில் 1 சீ தர பாடசாலையாக இயங்கி வந்துள்ளது. எனினும் 2011ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்தப்பாட சாலை முஸ்லிம் வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கி வந்துள்ளது. இது பற்றி முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் உதய ராணி முனீஸ்வரன் மற்றும் வலயக் கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். எம். ஜவாத் ஆகியோர் ஊடாக கடித மூலம் மாகாண கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத்தினேன். அத்துடன், குறித்த பாடசாலையை மீண்டும் 1 சீ தரப் பாடசாலையாக இயங்குவதற்குரிய அனுமதியை வழங்குமாறு அதிபர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் வேண்டு கோள் விடுத்திருந்தேன்.இவ்வாறு எனது வேண்டுகோளை ஏற்று குறித்த பாடசாலையை மீண்டும் 1 சீ தரப் பாடசாலையாக இயங்குவதற்குரிய அனுமதியை மாகாண கல்வி அமைச்சு வழங்கியுள்ளது என்றார். (2)

## வவு.புகையிரதக் கடவைகளின்

# பாதுகாப்பு ஊழியர்கள் நிரந்தர நியமனம் கோரி பணிப்பகிஷ்கரிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட புகையிரத கடவைகளின் தற்காலிக பாதுகாப்பு ஊழியர்களாக கடமையாற்றுபவர்கள், தமது நிரந்தர நியமனம் மற்றும் சம்பள உயர்வு கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பித்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்றுமுன்தினம் மூன்றாவது நாளாக நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட புகையிரத காப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.ஜெ.றொஹான் தெரிவிக்கையில், 'புகையிரத சேவை விஸ்தரிக்கப்பட்ட போது, ஆறு மாத காலப்பகுதிக்குள் எம்மை நிரந்தரமாக்குவதாக தெரிவித்து பொலிஸாரால் நாம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டோம்.

ஆனால் மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் எமக்கு நிரந்தர நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை. ஒரு நாளைக்கு 150 ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது. மாதம் 31 நாட்களும் வேலை செய்யும் எங்களுக்கு சுகயீன விடுமுறைகூட வழங்கப்படுவதில்லை' என தெரிவித்த அவர், தமது பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு பொலிஸார் இடையூறாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் மாத்திரமன்றி, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட பிரதேசங்களில் தற்காலிக புகையிரத கடவை ஊழியர்களாக கடமையாற்றுபவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமென பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 75 பேர் தற்காலிக புகையிரத பாதுகாப்பு ஊழியர்களாக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப்பிரிவில் 100 நாள் வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் பத்து இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத் தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பகட்ட வேலைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கமைய தண்டுவான் கிராம சேவையாளர் பிரிவில் நிர்மாணிக்கப்படவுள்ள குழாய்க் கிணறு மற்றும் பாலம் அமைத்தல் வேலைகள் முற்பகல் 10 மணிக்கும் பேராறு கிராம சேவையாளர் பிரிவில் பொதுநோக்கு மண்டபத்திற்குரிய அடிக்கல் நாட்டும் நிகழ்வு முற்பகல் 11 மணிக்கும் பனிக்கன்குளம் கிராம சேவையாளர் பிரிவில் சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பிற்பகல் ஒரு மணிக்கும் இடம்பெறவுள்ளதாக ஒட்டுசுட்டான் பிர தேசசெயலாளர் இ.குருபரன் தெரிவித்துள்ளார். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1158

## சின்னானும் சிட்டுக்குருவிகளும்

சின்னானுக்கு ஒரு நூதனமான பிரச்சினை.

அவனும் மனைவியும் சலவைத் தொழிலாளர்கள். சில நாட்களாக அவர்கள் துவைத்துக் காயப்போடும் துணிகளைச் சிட்டுக் குருவிகள் அசுத்தம் செய்துவிட்டுச் சென்று விடுகின்றன. சின்னான் முதலில் இதை தற்செயல் என்று நினைத்தார்.

ஆனால் அடுத்தடுத்த நாட்களிலும் இது போன்றே நடந்தது. மற்றத் தொழிலாளர்களும் இதே படித்துறையில்தான் துணிகளை வெளுக்கிறார்கள். குருவிகள் அந்த துணிகளை அண்டவில்லை. சின்னாவின் துணிகள் மீது மட்டுமே அவை எச்சம் இட்டுச் சென்றன. இதனால் துணிகளை மீண்டும் அலசிக் காயப் போடுவது மிகுந்த சிரமமாகி விட்டது.

இது ஏதோ சாமி குத்தம் மாதிரித் தெரியுது என்றார்கள் நண்பர்கள். சின்னான் வசிக்கும் ஊரில் சாமியார் ஒருவர் இருந்தார். நல்ல மனிதர். ஊர் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வார்.

சின்னான் தனது குடும்பத்துடன் சென்று விடயத்தை சொன்னார். சாமியார் சின்னானை உற்றுப் பார்த்தார். சின்னான் தவறு செய்பவர்போன்று தெரியவில்லை. மிகவும் அப்பாவியாகத் தெரிந்தார். அடுத்து சின்னான் மனைவியிடம் பேசினார். அவர்களை சற்று எட்டத்தில் இருக்கச்சொல்லி விட்டு சின்னானின் மகன் ஆறு முகத்திடம் பேச்சுக்கொடுத்தார்.

நீ என்ன படிக்கிறே?

நாலாவது படிச்சேன். இப்போ ஸ்கூலுக்கு போகலை. நம்மளை மாதிரி ஏழைகளுக்கு படிப்பு எதுக்கு? நீ படிச்சது போதும் வீட்டுலே இருன்னு அய்யா சொல்லிட்டாரு என்றான் ஆறுமுகம்.

உனக்கு படிக்க ஆசையா? இல்லையா?

ஆசைதான். ஆனா அய்யா விடனுமே? என்றான் ஆறுமுகம்.

நான் அனுப்பச் சொல்றேன் என்று சாமியார் சொல்ல சரி என்று தலையாட்டிய ஆறுமுகம் நான் ஸ்கூலுக்குப் போயிட்டா சிட்டுக் குருவி என்ன செய்யும் என்றான். எந்தச் சிட்டுக்குருவி எனச் சாமியார் ஆச்சர்யத்தில் நிமிர்ந்தார். எங்க வீட்டுக்கூரைக் கொட்டகையில் சிட்டுக்குருவி ஒண்ணு கூடு கட்டியிருக்கு. தினமும் அய்யாவும் அம்மாவும் வேலைக்குப் போனதும் அது கீழே இறங்கி வரும். சற்று நேரம் என்கூட விளையாடிட்டு வெளியே போகும். நான் ஸ்கூலுக்குப் போயிட்டா அது என்னைத் தேடுமே என்றான் ஆறுமுகம்.



குருவி உன்னைப் பார்த்துப் பயப்படாதா? என சாமியார் கேட்டார்.

பயப்படாது. குருவியும் நானும் ஃப்ரெண்ட்ஸ் என்றான் ஆறுமுகம்.

சாமியார் யோசித்தார். அங்கேயும் குருவி இங்கேயும் குருவி. அங்கே சின்னான் தொழிலுக்கு குருவிகள் இடைஞ்சல் தருகின்றன. இங்கே ஒரு குருவி சிறுவன் ஆறுமுகத்தோடு நட்பாக இருக்கிறது. இரண்டும் வெவ்வேறு இடங்களிலும் நிகழும் சம்பவங்கள்.

ஆனாலும்சிட்டுக்குருவிகளின் செயலை ஒரு அமானுஷ்ய நிகழ்வாக ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?



சிட்டுக்குருவிகள் சுதந்திரத்தின் அடையாளமாக அறியப்படும் ஒரு பறவை. சுறுசுறுப்பாக இருக்கும்.

சிறார்களைசிட்டுக்குருவிகள் போன்று ஆடிப்பாடித் திரிகிறார்கள் என்பார்கள். படிக்க வேண்டிய வயதில் பள்ளிக் கூடம் செல்வதுதான் சிறுவர்களுக்கு உண்மை யான சுதந்திரம். எனவே ஆறுமுகத்தை மீண்டும் பள்ளிக் கூடம் அனுப்புவதில் உறுதியாக இருந்தார் சாமியார்.

சின்னானையும் அவர் மனைவியையும் அருகே வரச் சொன்னார். நீங்க உங்க பையனைப் பள்ளிக்கூட அனுப்பி வையுங்க உங்க பிரச்சினை தீரும் என்றார்.

என்ன சாமி சொல்றீங்க. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்ட மாதிரி? என்று சின்னான் ஏதோ பேச வாயெடுத்தார்.

நான் சொல்லுறதை மட்டும் செய் ங்க எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று சொல்லி சாமியார் அவர்களை அனுப்பிவிட்டார். இந்தப் பிரச்சினைக்கு இதுவே சரியான தீர்வு என்று சாமியார் நம்பினார்.

சாமியாரின் கட்டளைக்கு பணிந்து சின்னான் ஆறு முகத்தை மீண்டும் பள்ளிக்கு அனுப்பி வைத்தார். அதன்பிறகு சின்னான் துணிகளை இராண்டாவதுமுறை வெளுக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதேயில்லை.

06.2015
05

## இன்றைய நாளின்



## முன்னைய பதிவுகள்

- 1864- அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவின் பியெட்மொண்ட் நகரில் இடம்பெற்ற போரில் அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளைத் தோற்கடித்து கிட்டத்தட்ட 1,000 பேரை சிறைப்பிடித்தனர்.
- 1900- இரண்டாம் போவர் போர்: பிரித்தானியர் தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியாவைக் கைப்பற்றினர்.
- 1912- ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் கியூபாவில் இறங்கினர்.
- 1956- இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- 1959- சிங்கப்பூரின் முதலாவது அரசு பதவியேற்றது.
- 1967- இஸ்ரேலிய வான்படையினர் எகிப்து, ஜோர்தான், சிரியா ஆகியவற்றின் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1968- ஐக்கிய அமெரிக்காவின் அரசுத் தலைவருக்கான வேட்பாளர் ரொபேர்ட் கென்னடி பாலஸ்தீனர் ஒருவரால் சுடப்பட்டார். இவர் அடுத்த நாள் உயிரிழந்தார்.
- 1969-அனைத்துலக கம்யூனிஸ்டுகளின் மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.
- 1974- ஈழப்போர்: சிவகுமாரன் உரும்பிராயில் காவற்துறையினர் சுற்றி வளைத்தபோது சயனைட் அருந்தி மரணமடைந்தார். இவர் ஈழப் போரில் முதன்முதலில் சயனைட் அருந்தி வீரச் சாவடைந்தவர்.
- 1977- செஷெல்சில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1977 - முதலாவது தனிக்கணினி அப்பிள் IIவிற்பனைக்கு விடப்பட்டது.
- 1979 - இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி அரசுடைமையாக்கப்பட்டது.
- 1984 - இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சீக்கியர்களின் பொற்கோயிலில் தாக்குதல் நடத்த உத்தர விட்டார்.

### பிறப்புகள்

- 1898 - ஃபெடரிக்கோ கார்சியா லோர்க்கா, ஸ்பானிய எழுத்தாளர் (இ. 1936)
- 1925 - வ. அ. இராசரத்தினம், ஈழத்து எழுத்தாளர்.
- 1975 - சிட்ருனாஸ் இல்கவுச்காஸ், லித்துவேனிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1910 - ஓ ஹென்றி, அமெரிக்க எழுத்தாளர் (பி. 1862)
- 1958 - ரெங்கநாதன் சீனிவாசன், மொறிசியஸ் அரசியல்வாதி (பி. 1910)
- 1974 - சிவகுமாரன், சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது ஈழப் போராளி (பி. 1950)
- 2002 - மு.சிவசிதம்பரம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்
- 2004 - ரோனால்டு ரேகன், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி (பி. 1911)
- 2004 - கே. கணேஷ், எழுத்தாளர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- உலக சுற்றுச்சூழல் நாள்

### உலக சுற்றுச்சூழல் தினம்




உலக சுற்றுச்சூழல் தினம் (World Environment Day- WED) ஐக்கிய நாடுகள் அவையால் ஆண்டு தோறும் ஜூன் 5 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வரும் ஒரு முக்கிய சூழல் தொடர்பான நிகழ்வு ஆகும். இது ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபையால் 1972 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச் சபையின் சார்பில் இத்தினத்தின் கொண்டாட்டங்களுக்குப் பொறுப்பாக ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம் (UNEP) செயற்படுகின்றது. உலகிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இது தொடர்பான நிகழ்வுகள் நடைபெற்றாலும், ஒவ்வொரு ஆண்டிலும், முதன்மைக் கொண்டாட்டத்துக்கான இடமாக ஒரு இடம் தெரிவு செய்யப்படுவதும் வழக்கமாக உள்ளது.

சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் கடந்த சில பத்தாண்டுகளாகவே உலகம் முழுவதிலும் உணரப்படுகின்ற ஒன்றாக இருந்து வருகின்றது. மனித நடவடிக்கைகளால் சூழலில் ஏற்பட்டுவரும் விரும்பத்தகாத மாற்றங்களும், அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும், இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. உலக சுற்றுச்சூழல் தின நிகழ்வுகளின் முக்கியமான நோக்கம், உலகம் தழுவிய அளவில் சூழலின் முக்கியத்துவம் பற்றிய உணர்வை ஏற்படுத்துவதும், அரசியல் மட்டத்தில் கவனத்தை ஈர்த்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தூண்டுவதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

...காவிரி தண்ணீர் பிரச்சினையில், தமிழ்நாட்டுக்கு நீதி கோரி ரஜினிகாந்த் சென்னையில் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்.

காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் விட மறுப்பதால், காவிரி வறண்டு கிடக்கிறது. இதுபற்றிய மத்திய அரசின் உத்தரவையும், நடுவர் மன்றத்தின் தீர்ப்பையும் கர்நாடக அரசு ஏற்கவில்லை.

கர்நாடக அரசு, நீண்ட காலமாகவே இந்தப் போக்கைக் கடைபிடித்து வருகிறது.

உண்ணாவிரதம்

தமிழகத்துக்கு தண்ணீர் தர மறுக்கும் கர்நாடக அரசுக்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் கர்நாடகத்துக்கு நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று வலியுறுத்தி, தமிழக நடிகர்- நடிகைகள் 2002 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் திகதி பேரணி நடத்தினார்கள். இந்தப் பேரணி நெய்வேலியில் நடந்தது.

இந்தப் பேரணியில் ரஜினிகாந்த் கலந்து கொள்ளவில்லை. அதற்குப்பதிலாக, மறுநாளே தமிழகத்துக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கர்நாடக அரசை வலியுறுத்தி, சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம், சேப்பாக்கத்தில் உள்ள அரசு விருந்தினர் மாளிகை அருகே 2002 அக்டோபர் 13 ஆம் திகதி நடைபெற்றது. உண்ணாவிரதத்துக்காக பெரிய மேடை அமைக்கப்பட்டு, அதில் மெத்தை போடப்பட்டு இருந்தது.

காலை 6 மணிக்கு அங்கு வந்த ரஜினிகாந்த், 8 மணிக்கு உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.



உண்ணாவிரதத்தின்போது ரஜினி, அருகே (சங்கர்) கணேஷ்.

ரஜினி, வெள்ளை நிறத்தில் பைஜாமாவும், குர்தாவும் அணிந்திருந்தார்.

மொட்டைத் தலையுடனும், சுத்தமாக சவரம் செய்யப்பட்ட முகத்துடனும் காட்சி அளித்தார். சட்டையில் கறுப்பு 'பேட்ஜ்' குத்தியிருந்தார்.

வாழ்த்து

உண்ணாவிரதம் இருந்த ரஜினிகாந்துக்கு நடிகர் - நடிகைகள் உள்ளிட்ட ஏராளமான திரை உலக பிரமுகர்கள் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பொன்னாடை, மாலைகள் அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். சிலர் அவருடன் சிறிது நேரம் உண்ணாவிரத மேடையில் அமர்ந்து இருந்தனர். ரசிகர்களும் திரண்டு வந்து ரஜினிகாந்துக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

பழச்சாறு குடித்தார்

சரியாக மாலை 5 மணிக்கு 'இப்போது ரஜினிகாந்த் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்வார்' என்று அறிவிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து நடிகர்கள் சரத்குமாரும், நெப்போலியனும், நடிகை ரேகாவின் மகள் அபிரைனாவின் கையில் ஆரஞ்சு பழச்சாறை கொடுத்து ரஜினிகாந்திடம் கொடுக்கும்படி கூறினார்கள்.

சிறுமி அபிரைனா ரஜினிகாந்திடம் ஆரஞ்சு பழச்சாறை கொடுத்தார். அதை ரஜினிகாந்த் குடித்து உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

அதன் பின்னர் மேடை முன்பு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் நடிகர் ரஜினிகாந்த் பேசினார். அவர் கூறியதாவது:-

நன்றி

'இங்கே வருகை தந்திருக்கும் என்னை வாழ வைக்கும் தமிழ் மக்களே! ரசிக பெருமக்களே!

திரை உலகைச் சேர்ந்த நண்பர் களே! உங்கள் அனைவருக்கும் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வந்து என்னை வாழ்த்திய அரசியல் கட்சி தலைவர்களுக்கு நன்றி. பத்திரிகையாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-156

...சிலபேரப் பாத்தாலே தெரிஞ்சு போயிரும் நல்லவு கன்னு. அவுகளுக்கு மறைக்கத் தெரியாது; இருதயக் கூடு என்னா நெனைக்குதுன்னு கண்ணாடி மாதிரி காட்டிக் குடுத்திரும் கண்ணு.

சிலபேரப் பாத்தவுடன் தெரிஞ்சு போயிரும் சீ! சீர்கெட்ட ஆளு- கோளாறா இல்லாட்டிக் குடிகெட்டுப் போயிருமன்னு.

வெசமும் வெனயமும் அவுக கண்ணுலயே திட்டுத் திட்டாத் தெரியும். ஒதுங்கிப் போயிரலாம்; ஒரு தொந்தரவு இல்ல.

ஆனா இருதயம் நெனைக்கிறது என்னான்னு கண்ணுல துப்புக் காமிக்காத ஆளுக இருக்காகளே அவுகதான் ஆபத்தான ஆளுக. அவுகள ஆழங்காண முடியாது.

அழுக்குத்தண்ணி ஆழங் காமிக்குமா? காமிக்கதில்ல.

திம்சு... அப்படியாப்பட்ட ஆளு.

இன்னது நெனைக்கிறா ங்கிறதக் கண்ல காமிக்க மாட்டா. அப்படியே காமிச்சாலும் பொய்ய நெசமாக் காமிப்பா. நெசத்தப் பொய்யாக் காமிப்பா. அவள த்தான் மத்தவுக கண்டு புடிக்க முடியாதே தவிர அவ எல்லாரையும் கண்டு புடிச்சு வச்சிருப்பா.

இன்னாருக்கு இன்னது புடிக்கும்கிறதக் கண்டறியவே ஒரு பெரும்புத்தி வேணுமா இல்லையா?

அழுதபுள்ளைக்குப் பாலும் புள்ளத்தாச்சிக்குப் புளியங்காயும் புடிக்கும்ன்னு எல்லாருக்கும் தெரியும். குடிகாரனுக்குக் காரக்கறி புடிக்கும்; கூலிக்காரனுக்கு எச்சாக் காசு குடுத்தாப் புடிக்கும்; கொமரிப்புள்ளைக்கு நொறுக்குத் தீனி புடிக்கும்; சாகப்போற கெழவனுக்கு சொந்த பந்தம் வந்து நெத்தி தொட்டாப் புடிக்குங் கறதெல்லாம் திம்சுக்குத்தான் தெரியும்.

அத்தனையும் தெரிஞ்சுக்கிட்டு அவுகளுக்குப் புடிச்சத மடிப் பிச்சை போட்டு விட்டுட்டுத் தன் போக்குல போயித் தன் காரியம் முடிக்கிறவ திம்சு.

கெழட்டு மாமனுக்கு என்ன கொறைங்கிற[illegible] துருவித் துருவித் துப்பறி[illegible] கிட்டா.

தனக்கு விவரம் தெரிஞ்ச நாள்லயிருந்து தன்ன யாரும் மதிக்கிறதில்லங்கறதுதான் கெழவனுக்கு இருக்கிற பெருங் கொண்ட கவலை பெறவிக்[illegible] பறிப் போச்சு பெருசு. ஆனா [illegible]லும் வறண்ட கெணத்துல திடீ[illegible] கன காய் நகத்திட்டா.

வெள்ளி செவ்வாயில தலைக்கு முழுகி சாம்பிராணி காமிச்சு மடார்ன்னு போயி விழுந்தா கெழவன் கால்ல.

எந்திரி தாய் எந்திரின்னு ர்னு ஊத்தடிச்ச மாதிரி ஊத்துது கண்ணீரு.



அப்பறம்... எப்படா வரும் வெள்ளி செவ்வாய் ன்னு ஏங்கி வீங்கிப் போச்சு பெருசு மனசு.

ரெண்டு முணு வருசத்துலயே கெழவனக் கிறுக்குப் புடிக்க வச்சுப்பிட்டா.

குழைய வடிச்ச சோறு- வெந்து மலந்த ஈரலு; மாறாத வெத்தல- மங்காத வெள்ளை; தலமாட்ல வெந்நி- எச்சி துப்ப ஏனம்; கம்பளி மேல கண்டாங்கிச் சீல; அவிச்ச மொச்ச- இடிச்ச தொக்கு (வேணுங்கிற வெல்லம் போட்டு)

இப்படியெல்லாம் உச்சி குளிர உபசாரம் பண்றதுமில்லாம, பேச்சுத் துணைக்கு அப்பப்ப சில பெருசுகளையும் கூட்டிவிட்ருவா.

சடையத்தேவருக்கு அந்தச் சுத்துவட்டாரத்துலயே தான்தான் மெத்தப்படிச்ச மேதாவின்னு நெனப்பு.

ஆடு குட்டிபோட்டாலும் ஆள் செத்துப் போனாலும் அது அதுக்குன்னு ஒரு சொலவம் சொல்லி அலையிற ஆளு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# நீரும் நானும்

என்மேல் நீர் கொண்ட தூய காதலைப் புரியும் முன்னே உன் மேல் எனக்கோர் தீராத மோகம், தாகம் இருந்த போதும் உன்னோடான பந்தம் எனக்கு புரியாத புதிர், எனது ஒவ்வொரு சந்தோசத்திலும் மெய் நீர் அரும்பி விதிர் விதிர்த்த போதும் துன்பத்தில் விழிநீர் சொரிந்து என் கண் மயிலிறகால் மருந்திட்டு நீர் என்னை மையலுற்ற போதும் உன் கட்டுக்குள் நான் இருப்பதை உணரவில்லை. இன்னும்சொல்வதானால் கடற்கரை ஈரமணலில் பதிக்கும் தடங்கள் போல் உன் அன்பின் அடையாளங்கள் ஆரவாரமாயும் நிசப்தமாயும் மறைந்து போயின. என் உயிர்க்கலம் ஒவ்வொன்றிலும் உனது ஊடுருவல் என்னை அன்போடு அரவணைக்கையில் கூட நான் புரிந்துகொள்ளவில்லை நீர் இன்றி நான் இல்லை என்று. ஆனாலுமென்ன எனது அலட்சியம் இன்று நீர் என்னை நீங்கிச் செல்கையில் உமது பிறப்பு முகவரி என நீர் சார்ந்த பூர்வீகத்தைத் தேடி அலைகையில் உனது ஆழமான அன்பின் பிரவாக சக்தி நீர் என்னோடு இரண்டறக் கலந்திருப்பதை உணரவைத்தது

அறிமுகத்தை வாசித்தவுடன் உங்கள் மனச்சிறைகளிலிருந்து காதல் பட்டாம்பூச்சிகள் விடுதலை ஆகின்றமை புரிகின்றது. ஆனால் இங்கு உங்களிடம் பகிரப்போகும் நீர் தொடர்பான அறிந்தும் அறியாதது போலிருக்கும் மெய்யியலுடன் இணைந்த விஞ்ஞான விளக்கங்கள் ஆகும்.

ஐம்பூதங்களால் சிருஷ்டிக்கப்பட்ட உயிர்களின் கேந்திர இயக்கு சக்தியாக வியாபித்திருக்கும் நீரானது இயற்கையின் உயிர்ப்பொருளாகும். எம் உடலில் உள்ள நீரானது, இப்பிரபஞ்சத்தின் நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவற்றோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. உடலின் உயிர்ப்பாயமாகவும், நீரில் கரைந்துள்ள தாதுப் பொருட்களாக நிலமும், உயிரணுக்களில் பரவும் நீரில் கரைந்த எம் மூச்சு காற்றாகவும், உடல் எனும் கூட்டிலுள்ள இடைவெளியில் ஆகாயத்தை பதிக்கும் உருவமைப்பு கொடுக்கும் பாய்பொருளாக மற்றும் நெருப்பானது உடல் தட்ப வெப்பமாக நீரோடிணைந்து எமது உயிரோட்டத்திற்கு ஆதாரமாய் விளங்குகின்றது.

இத்துணை தன்மை பொருந்திய. ஒவ்வொரு உயிர்களினதும் நிலவுகை விதியை நிர்ணயிக்கும் நீரின் வளமானது வாழ்க்கை நிலை பேறு வரமான நிலத்தோடு ஈர்க்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். அந்த வகையில், குறிப்பாக யாழ்.குடாநாட்டு மக்களின் நிலபுலத்தில் நீர்வளத்தின் வகி வாகம் எவ்வாறுள்ளது என்பதை நோக்குதல் இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

யாழ்.குடாநாட்டின் நன்னீர் வளமானது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நிலமேற்பரப்பு சேமிப்பு தளங்களிலும், பிரதானமாக நிலக்கீழ்/நிலத்தடி நன்னீர் வளத்திலும் தங்கியுள்ளது. நிலமேற்பரப்பு நீரின் கொள்ளளவு மழைவீழ்ச்சியை பொறுத்தும், நிலத்தடி நீர் சேமிப்பானது காலநிலை மாற்றம் பாவனைகளின் தன்மை மற்றும் தரை கடல் நீர் மட்ட அளவுகளிலும் தங்கியுள்ளது.

நில மேற்பரப்பு நீர்சேமிப்பு தளங்களாக எமது முன்னோரின் படைப்பில் உருவான கேணிகள், குளங்கள், வில் என்பன காணப்படுகின்றன. ஆயினும் இவற்றின் இன்றைய கவனிப்பாரற்ற, தூர்வாரப்படாத, பாழடைந்த தன்மைகள் நிலமேற் பரப்பு நீர் சேமிப்பு வளம் மறைந்து வரும் சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன.

நிலக்கீழ்/நிலத்தடி நன்னீர் சேமிப்பு வளங்களின் தோற்றமானது இற்றைக்கு மூன்று கோடி வருடங்களிற்கு முன்னர் இந்திய குடா நாட்டின் தென்மேற்கு எல்லைக்கும் ஈழத்தீவின் வடமேற்கு எல்லை கரைகளுக்கிடையிலான மயோசின் காலப் பகுதியின் கடலின் அடையல்களாக படர்ந்திருந்த சுண்ணக்கல் படிவுகள் கடல்மட்டத்திற்கு மேலே உயர்ந்து நிலமாக மாறிய பொழுது ஏற்படும் பிளவுகளிலும் குகைகளிலும் நீர் ஊடுருவி சேமிக்கப்பட்டவையாகும். இங்கு அடையல்களிலுள்ள நுண்துளைகளும், மூட்டுகள், பிளவுகள் என்பன நீரை உட் புகவிடும் போது சுண்ணாம்புக் கல்லிலுள்ள கனியுப்புக்கள் கரைவதால், சுண்ணாம்புக்கல் பாறைகளிடையே காணப்படும் வெளிகளிலும், குகை போன்ற பள்ளங்களிலும் மழைநீர் ஊடுருவி தரைக் கீழ் நன்னீர் வளமாகச் சேமிக்கப்படுகின்றது.

மேலும், இவ்வாறு பாறைகளோடு நீர் வடிகையில், கரையாத மூலகங்கள் பாறைகளுக்கு மேல் படிவதோடு, சுண்ணாம்புக்கல்லில் சிறியளவில் காணப்படும் இரும்பு மூலகமானது மண்ணுடன் கலந்து வளம் மிக்க சிவப்பு மண்ணாக விவசாயத்திற்கு பயன்படுகின்றது.

இயற்கையின் இரசாயன வானிலையாலழிதல் ஏற்படும் அதிகளவிலான காபனீரொட்சைட் வாயு மழைநீரில் கரைந்து சுண்ணாம்பு பாறைகளை பாரியளவில் கரைத்ததினால் ஏற்பட்ட பாரிய நிலக்கீழ் குழிகள், தரைக்கீழ் குகைகள் இடிந்து வீழ்வதால் உருவான தரைக்கீழ் நீர்மட்டங்களும் ஆழமறிய முடியாத நிலக் கீழ் நீர் சேமிப்பு தளங்களை உருவாக்கின. உதாரணம்- புத்தூரிலுள்ள நிலாவரைக் கிணறு, குரும்பசிட்டியிலுள்ள வற்றா கிணறு, தொண்டைமானாறு பொந்து கிணறு, மானிப்பாய் இடிகுண்டு கிணறு.

தரைக்கீழ் நீர் வளத்தின் நன்னீர் தன்மையானது நீரில் கரைந்துள்ள கனியுப்புகளினால் ஏற்படும் உவர்த் தன்மையினால் தீர்மானிக்கப்படுகிறது. தரை அமைப்பு மற்றும் கால நிலை மாற்றத்தினால் ஏற்படும் நிலத்தடி நீர்மட்டம் குறைதல்/கூடுதல் என்பவற்றை பொறுத்து உவர்த் தன்மை மாறுபடும்.

நில அமைப்பின்படி, யாழ்.குடா நாடானது இரண்டு பிரதான கடனீரேரிகளான ஆனையிறவு மற்றும் வடமராட்சியால் ஊடுருவப்பட்டு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி எனும் நிலப்பரப்புகளாக காணப்படுவதானது, குடாநாட்டின் எந்த ஒரு நிலப்பகுதியும் கடல் நீர் நிலையிலிருந்து 8km க்கு மேற்படாதவாறு உள்ளமை, உவர் நீர் ஊடுருவலிற்கு வாய்ப்பாக உள்ளது.

எனவே, மழையால் பெறப்படும் நீர் சுண்ணாம்புக்கல் பாறைக்கூடாக வடிந்து நன்னீராக தரையின் கீழ் தேங்குகையில் அடர்த்தி கூடிய உவர் நீர், அடர்த்தி குறைந்த நன்னீர் வில்லையின் கீழ் செல்லும் தன்மையானது குடாநாட்டின் கரையோரத்திலிருந்து மையப்பகுதியை நோக்கிச் செல்லும் போது அதிகரிக்கின்றது.

தரைக்கீழ் நீர் வளமும் நில அமைப்பும் இவ்வாறிருக்கையில், நிலத்தடி நீர் பாவனை பற்றி நோக்குகையில் யாழ்.குடாநாட்டு மக்கள் இலங்கையின் ஏனைய தமிழர் பாரம்பரிய பிரதேசங்களை விடவும் மிகவும் சிறிய நிலப்பரப்பில் அதிகளவிலான விவசாய நடவடிக்கைகளை அளவுக்கதிகமான செயற்கை உரப்பாவனை, கிருமி நாசினி பயன்பாடோடு செய்து வருகின்றமை நீடித்து நின்று கொல்லும் உயிர் நோய்களையும் அதிகளவில் உற்பத்தி விளைவுகளாக பெறுவதும் யாவரும் அறிந்ததே.

மேலும், பெரும்பாலான பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் நிலத்தடி நீரை நம்பியும் சிலவற்றிற்கு மட்டுமே மழைநீரை நம்பியும் உள்ளதோடு, துலா, பட்டை மற்றும் இதர உள்ளூர் பாரம்பரிய சூத்திர முறையிலான முறைகள் அருகி நீர் இறைக்கும் இயந்திரங்களின் மூலமாக அளவுக்கதிமான முறையில் நிலத் தடி நீர் உறிஞ்சப்பட்டு வீணாக்கப்படுதல் நிலத்தடி நீரின் அளவு குறைந்துவருவதற்கு காரணமாக உள்ளது.

இற்றைக்கு கிட்டத்தட்ட 50 வருடங்களிற்கு முன்னர் சுமார் 10 இலட்சம் வரையிலான குடாநாட்டு மக்களின் பாவனை பெருமளவில் வீட்டுத்தேவைக்காகவும், பயிர்ச்செய்கைக்காகவும் பயன்படுத்துகையில் அறியப்பட்ட நிலத்தடி நீர் பற்றாக்குறை இன்று வெறும் 6 இலட்சத்திற்கும் குறைவான மக்களின் மிக அதிகளவான ஆடம்பர, அழகு செயற்பாடுகள், வீட்டுத் தேவைகள், பயிர்ச்செய்கை, வீதி அபிவிருத்தி, தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள் என்பவற்றில் முகாமைத்துவம் மற்றும் பேணுகை இன்றி பாவித்து வருதலானது பெரும் அச்சுறுத்தலாக உள்ளமை கண்கூடு.


அத்தோடு, குடாநாட்டின் இயற்கை கொடையும் உவர்நீரை அகத்துறிஞ்சி உவர்நீர் ஊடுருவலை தரையில் தடுக்கும் சாதனமான பனைவளம் பெருமளவில் வெட்டப்படுதல், கடற்கரையோர கண்டல் மற்றும் தாவரப் போர்வை அகற்றப்படுதல் என்பன நிலத்தடி நன்னீர் உவர்நீராவதில் காரணிகளாகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, அண்மையில் அறியப்பட்ட நிலத்தடி நீருடன் கழிவு எண்ணெய் கலந்திருப்பதால் ஏற்பட்டுள்ள தூயநீர் பயன்பாடு தொடர்பான பாதிப்புகளும், மிக வேகமான முறையில் தரைக்கீழ் நீர் உறிஞ்சி எடுக்கப்படுதல், அளவுக்க திகமான செயற்கை உரம் மற்றும் கிருமிநாசினிகளுடனான நைத்திரேட், ஓகனோபொஸ்பேஸ்ட், குளோரோ கைட்ரோகாபன், சேர்க்கைகள் என்பன நீரை நஞ்சாக்கி மக்களிற்கு பெரும் வாழ்வாதாரபிரச்சினையாக உருவெடுத்துள்ளன.

எனவே, உயிர் நாடியான நீரின் தரமிழப்பு அல்லது நீரின் நஞ்சாதல் தன்மை மற்றும் நன்னீர் மட்டம் குறைவதால் ஏற்படும் நீர்ப்பற்றாக் குறையோடு இணைந்த உயிர் வாழ்தலிற்கான பாதிப்புகள் எமக்கு உடனடி மரணத்தை ஏற்படுத்தாவிடினும் அணுவணுவாய் நின்று கொல்லும் கொடிய நோய்களை ஏற்படுத்தக்கூடியன.

இவ்வாறான நோய்கள் இலகுவில் இனங்காணமுடியாதவையாகவும், நோய்களிற்குரிய நீரில் அசுத்த / நஞ்சான நீரில் காணப் படும் இரசாயன காரணிகள், எமது உயிர்க் கலங்களில் உள்ள பரம்பரை அலகு காரணிகளின் கட்டமைப்பில் அமைப்பழிவையோ மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திமிக்கனவாக உள்ளன.

விவசாய செயற்கை உரம், கிருமிநாசினி மற்றும் கழிவு ஒயிலிலுள்ள இரசாயன சேர்க்கைகள் நீருடன் கலப்பதால் பாதிக்கப்படும்/செயலிழக்கும் மனித உறுப்புகளும் உயிர் ஆபத்தை விளைவிக்கக் கூடிய இரசாயன பொருட்களையும் கீழு ள்ள வரைபடம் காட்டுகின்றது.




எனவே, தரம் இழந்து வரும் நிலத்தாலும், நஞ்சாகி வரும் நீராலும் ஏற்படும் சங்கிலித்தொடர் பாதிப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வுடனும், நீண்ட பேண்தகு பாவனை தொடர்பாக உறுதியான பாதுகாப்பு செயற்பாடுகளில் ஈடுபட உணர்வு பூர்வமாக எமது நீர்வளம் தொடர்பாகவும் அதன் இன்றியமையாத முக்கியத்துவம் தொடர்பாகவும் சிந்தித்து செயற்படின், நீர்மீது எனக்கு ஒருதலைக் காதலன்று நீரும் நானும் இருதலைக் காதல் தானென்று. ஈற்றில் நீர் என்னோடு இருத்தலின் தார்ப்பரியம் மனதாரப் புரியுமாயின் தொலைந்து போகும் முகவரியை நாடி அதன் தூய்மையில் சரணாகதி காணல் அவசியம்.


**கு.குணாளன்**
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண
விஞ்ஞானசங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.


## வாரத்திற்கு ஒரு புதிர்! 136

டெங்கு நோயை கட்டுப்படுத்த இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நுண்ணங்கியின் பெயர் என்ன?

**புதிர் 136 இற்கான விடைகளை 15.06.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.க.கஜபதி**
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 135 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

**புதிர் 135 க்கான கேள்வியும் விடையும்:**
SCUBA என்றால் என்ன?
**Self Contained Underwater Breathing Apparatus**
நீரடி நீச்சலில் பாவிக்கப்படும் மூச்சுக்கருவி

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 136

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவுக்கு அருகில் மேலும் 5 இந்திய மீனவர்கள் கைது

கச்சதீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 5 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் தலைமன்னாருக்கு அழைத்துவரப்பட்டு கடற்றொழில் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.


எனினும் கச்சதீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தம்மை பின்தொடர்ந்து வருமாறு இலங்கை கடற்படையினர் உத்தரவிட்டதன் அடிப்படையிலேயே அவர்கள் கடற்படையினருடன் சென்றதாக ராமேஸ்வர மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கூட்டமைப்புக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குமாறு கோரப்படும் - டிலான்

(கொழும்பு)

**ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாக கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**



20ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கினால் 20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முடியும்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்க கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் கீழ் 30 நாட்களுக்குள் 20ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படும். கூட்டமைப்பின் அனைத்து கட்சிப் பிரதிநிதிகளும் இந்தத் திட்டத்திற்கு இணங்கியுள்ளனர்.

இதன்படி, எதிர்வரும் நாட்களில் அரசாங்க அதிகாரத்தை கூட்டமைப்பிற்கு வழங்குமாறு ஜனாதிபதியிடம் நேரடியாக கோரப்பட உள்ளது என டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆட்சி மாற்றம் ஏற்படுத்தாமலேயே 20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முடியும் என ஜாதிக ஹெல உறுமய கருத்து வெளியிட்டுள்ளது. (இ-5)

# திஸ்ஸவின் போலி உடன்படிக்கையினால் ஜனாதிபதி மைத்திரிக்கு பாதிப்பு ஏற்பட்டது

## கபீர் ஹாசிம்



திஸ்ஸ அத்தநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட போலி உடன்படிக்கையினால், பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவிற்கு பாரியளவு வாக்குகள் கிடைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவிற்கு அளித்த வாக்கு மூலத்தில் கபீர் ஹாசிம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி திஸ்ஸ அத்தநாயக்க ஊடகங்களுக்கு ஓர் ஆவணத்தை வெளியிட்டிருந்தார்.

இந்த ஆவணம் இன, மதங்களுக்கு இடையில் குரோதம் ஏற்படக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

குறிப்பாக சிங்கள, தமிழ் இனங்களுக்கு இடையில் இனக்குரோத உணர்வுகளைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

தேர்தலின் இறுதி நேரத்தில் ஆவணத்தை வெளியிட்டதனால் பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவிற்கு கிடைக்கவிருந்த வாக்குகளின் எண்ணிக்கை கனிசமானளவு வீழ்ச்சியடைந்தது என கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

கபீர் ஹாசிம் மற்றும் ஊடக நிறுவனங்களின் செய்திப் பணிப்பாளர்கள் ஆகியோரிடம் புலனாய்வுப் பிரிவினர் சம்பவம் குறித்து அண்மையில் வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டனர்.

வடக்கிலிருந்து முழுமையாக இராணுவத்தை அகற்றுவதற்கு இணங்குவதாக பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கையொப்பமிட்டுள்ளதாக இந்த ஆவணத்தை திஸ்ஸ அத்தநாயக்க ஊடகங்களுக்கு சமர்ப்பித்திருந்தார்.

இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதுடன், திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு எதிராக ஆவண மோசடி குற்றச்சாட்டின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (இ-5)

# வழிபாடுகளில் ஈடுபடுவதனை சிலர் கிண்டல் செய்கின்றனராம்

## மகிந்த கவலை

(கொழும்பு)

மத வழிபாடுகளில் ஈடுபடுவதனை சிலர் கிண்டல் செய்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்கால சந்ததியினரை மத வழிபாடுகளில் ஈடுபடுத்தி தேசத்தை நேசிக்க செய்வதனை விட்டு அவ்வாறு செய்யும் நபர்களை கேலி செய்வது சரியானதல்ல.

இவ்வாறு செய்வதானது மேல பார்த்துக் கொண்டு உமிழ்வதற்கு நிகரான தாகும்.

எந்த நேரத்திலும் இளம் தலைமுறையினரை மத வழிபாடுகளில் ஈடுபடுத்தும் முன்னுதாரணத்தை தலைவர்கள் வழங்க வேண்டும்.

நான் விஹாரைகளுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுவதனை சிலர் கிண்டல் செய்கின்றனர்.

எனினும், எதிர்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாக திகழவே நான் விரும்புகின்றேன்.

இளைஞர்கள் மத வழிபாடுகளில் ஈடுபடாமல் விட்டால் எதிர்கால சந்ததியினர் சீரழியக் கூடுமென முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிதுல்பவ்வவில் பொசோன் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## இல்லறத்தாருக்கு இரண்டு மந்திரங்கள்

உலக வாழ்வில் இருந்து கொண்டே நிறைவாக, நிம்மதியாக இருப்பது எப்படி என்று பலருக்குச் சந்தேகம் வரும். வாழ்வில் வெற்றிபெற இரண்டு அம்சங்கள் தெரிந்திருந்தால் போதும்.

1. உறுதியான உடல் 2. உயர்வான உள்ளம்

இவை இரண்டும் இருந்தால் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிவிடும். உயிர் உய்வு வெற்றுவிடும்.

உடம்பு என்பது உயர்ந்த கருவி. அதிசயமான கடவுள் கொடை. அதைச் சரியாக வைத்திருப்பது மனிதனுடைய கடமை. பாடசாலை களில் உடற்பயிற்சி வகுப்பு என்று ஒன்று உண்டு. ஆனால் உடற் பயிற்சி ஆசிரியர் நிலை பரிதாபம். தேர்வுக்கான பாடம் முடிக்காத மற்ற ஆசிரியர்கள் எல்லாம் இந்த வகுப்பைக் கொள்ளையடி ப்பார்கள்.

முதுகுத் தண்டின் உபயோகம், சரீரம் லேசாக இருப்பதன் அவசியம் இவை எல்லாம் இளமையில் விளக்கப்படுவது இல்லை. அதன் விளைவு, பலவீனமான ஒரு வாழ்க்கை முறை நாற்பதுக்குப் பிறகு மனிதனைத் தத்து எடுத்துக் கொள்கிறது.

'உடம்பை முன்னம் இழுக்கென்றிருந்தேன்' என்ற திருமூலர், "உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்" என்று உடம்பின் பெருமையை உணர்த்துகிறார். விவேகானந்தர் இரும்பு உடல் இளைஞர்களை இது கருதியே உருவாக்க நினைத்தார்.

எல்லாச் சுரப்பிகளும் சரிவர இயங்குவதுதான் இளமையின் இலக்கணம். நாளமில்லாச் சுரப்பிகளைச் சரியான இயக்கத்தில் வைத்திருப்பதுதான் யோகாசனங்களின் அடிப்படை.

இந்துக்களின் சூரிய வழிபாடு, தண்டம் சமர்ப்பித்தல், பிள்ளையாருக்கான தோப்புக்கரணம், விரத அனுஷ்டானங்கள் இவை உடல்நலம் பேணும் யுக்திகள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் உடற் பயிற்சி, யோகாசனங்கள் கட்டாய பாடம் ஆக வேண்டும். உறுதியான உடம்பில்தான் உயர்வான உள்ளம் இருக்க முடியும். உள்ளம் உயர்வாக இருந்தால்தான் உடம்பு உறுதியாக இருக்கும். இவை இரண்டும் ஒன்றை ஒன்று பாதுகாக்கும் 'வன சிம்ஹ நியாயம்'

அதாவது காடுதான் சிங்கத்தைப் பாதுகாக்க முடியும். சிங்கம் அங்கு மறைந்து வாழும். வெட்ட வெளியானால் வேட்டையாடப்படும். ஆனால் சிங்கம் காட்டைப் பாதுகாப்பதும் உண்மை. சிங்கம் போன்ற விலங்குகளுக்கு அஞ்சி காட்டிற்குள் வர மக்கள் தயங்குவர். காடு பாதுகாக்கப்படுகிறது. காடும் சிங்கமும் ஒன்றை ஒன்று பாதுகாப்பது போல் உறுதியான உடலும் உயர்வான உள்ளமும் ஒன்றை ஒன்று பாதுகாக்கின்றன. வேத்திரகீயம் என்ற ஊரில் பஞ்ச பாண்டவர்கள் பிராமண வடிவத்தில் தங்கி இருந்தனர். பிச்சை எடுத்து உண்ணும் நிலை தாய் குந்திக்குப் பெருங்கவலை. ராஜ குடும்பத்துப் பிள்ளைகள் பிச்சை எடுக்கிறார்களே என்பதை விட எடுத்த பிச்சை பீமனுக்கு மட்டுமே பற்றாது என்பது பெருங்கவலை.

வருகிற பிச்சையை இரு பாதியாக்கி ஒரு பாதியைப் பீமனுக்குக் கொடுத்துவிட்டு மறுபாதியைத் தாய் உட்பட ஐவர் உண்ணுவது வழக்கம். அந்த நிலையில் அவர்கள் தங்கி இருந்த வீட்டில் அழுகை ஒலி. பகாசுரனுக்கு வண்டி நிறைய உணவு தயாரித்து அந்த வீட்டில் இருந்து யாரேனும் ஒருவர் கொண்டு போய்க் கொடுத்து தாங்களும் அவனுக்கே சாப்பாடாக ஆக வேண்டும். அதாவது பகாசுரனால் சாக வேண்டும். அதற்குத்தான் அழுகை.

கஷ்டத்தில் இருக்கும் குந்தி அவர்கள் கஷ்டத்தை நீக்க முன்வந்தாள். பகாசுரனுக்கு உணவாக உணவு வண்டியில் தன் பிள்ளையை அனுப்ப ஒப்புக் கொண்டாள். பகாசுரனுக்கு உணவாகப் பிள்ளையை அனுப்புகிறாள் என்று பொருள் அல்ல. பீமனுடைய பலத்திலும் வீரத்திலும் ஆற்றலிலும் அவளுக்கு அத்தனை நம்பிக்கை. ஒரு நாளாவது பீமன் வயிராற உண்ணட்டுமே என்ற சுயநலக் காரணம். பீமனது பலம் ஒருபோதும் தவறாகப் பயன்பட்டது இல்லை. பிறர் துயர் தீர்க்கவே பயன்பட்டது. பகாசுரனைக் கொல்ல கீசகனன் என்ற காமுகனைக்கொல்ல மனித மாமிசப் பிரியன் இடும்பனை வெல்ல என்று உறுதியான உடல் உலக நன்மைக்காகவே பயன்பட்டது. உறுதியான உடல் உயர்வான உள்ளத்தால் ஆளப்பட்டு வந்தது.

இனி நான் சொல்லப் போவது கதையல்ல வரலாறு. எதிரியை வெற்றி கொண்டு அவனது செல்வங்களை அள்ளி வந்து தர்பாரில் குவித்திருந்தான் தளபதி. அந்த இரத்தினக் குவியலை இரு கையாலும் அள்ளிப் பார்த்த வீர சிவாஜியின் விழிகள் பவளக் கற்களாய்ப் பளபளத்தன. வைர நெஞ்சத்தின் முத்துப் புன்னகை தளபதிக்குப் பரிசுப் பத்திரமாய் தென்பட்டது. சிவாஜி ஒரு இரத்தி னப் பிரியன். செருப்புகளில் கூட இரத்தினங்களைத் தைத்துக் கொள்வது அவனது செருக்கல்ல கிறுக்கு. தளபதி வாய் திறந்தான். "மகராஜ் இந்தப் பரிசுகளை வெல்லும் உன்னத பரிசு அதோ" திரும்பிய திசையில் ஒரு முத்துப்பல்லக்கு என்ன அது சிவாஜியின் சிம்மகர்ஜனை.

''உயிருள்ள வைரம் நடமாடும் நவரத்தினம் மங்கையாய் மலர்ந்த மாணிக்கம். பருவம் கனிந்த பவளம்'' தளபதி பேசிக் கொண்டே போனான். பல்லக்கின் திரைச்சீலை சிவாஜியின் வாள் முனையால் வாய் பிளந்தது. உள்ளிருந்து நடுங்கியபடி ஒரு பேரழகி வெளிப்பட்டாள். யார் இவள்? கேள்வி அம்பு தளபதியைத் தாக்கியது.

''நாம் வெற்றி பெற்ற சுல்தானின் இளம் மனைவி பேரழகி என்பதால் உங்களுக்கான உயர்ந்த பரிசாகக் கொண்டு வந்தேன்''

"பெண்ணே நீ நிச்சயமாகவே அழகாக இருக்கிறாய். இப்படி ஓர் அழகியை என் வாழ்நாளில் நான் கண்டது இல்லை" சிவாஜியின் வார்த்தைகளால் நடுங்கினாள் அந்த நங்கை. வார்த்தைகள் தொடர்ந்தன.

''பெண்ணே! உன் அழகைப் பார்க்கும் போது எனக்கு ஓர் ஆசை தோன்றுகிறது'' சொல்லி விட்டு நிறுத்தினான் சிவாஜி.

சபை அந்த ஆசைக்கு அர்த்தம் தேடியது. அவனே தொடர்ந்தான். "நீ பேரழகி. உன்னைப்போல் என் அம்மா அழகாக இருந்திருக்கக் கூடாதா? அதுதான் இல்லை. உன் வயிற்றில் நான் பிள்ளையாகப் பிறந்திருந்தால் எவ்வளவு அழகாக இருந்திருப்பேன் தெரியுமா?'' சபை ஸ்தம்பித்தது. பால் ஊட்டும் போதே பண்பாட்டையும் ஊட்டியிருந்தாள் தாய் ஜீஜிபாய். உறுதியான உடம்பில் உயர்வான உள்ளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையாளர்கள் கூட்டம் யுத்தத்தின் எதிர்மறை விளைவே!



**போ**ருக்குப் பின்னரான காலப்பகுதியில் வளர்ந்து வரும் இளைஞரின் வன்முறை தொடர்பாக சிறு கட்டுரையொன்றை எழுதியிருந்தேன். மாணவி வித்தியாவின் படுகொலையை அடுத்து மேலும் அது தொடர்பாக சிந்திக்க வேண்டியுள்ளது.

சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையை ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன மாறி மாறி ஆட்சி செய்தன.

வடக்கு, கிழக்கு தமிழர் பிரதேசங்களில் 1947 இலிருந்து 1956 வரை இலங்கை தமிழ் காங்கிரசும், 1956 இலிருந்து 1983 வரை இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன கூடுதலான தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பெற்று அவர்களின் பூர்ஷ்வா நலன்கள், அபிலாசைகளைப் பிரதிபலித்தார்கள்.

அக்காலப் பகுதியில் சாதி ஒடுக்குமுறைகள், அருமையாக சில கொலைகள், சில பெண் கடத்தல்கள் நடந்திருக்கின்றன. பொதுவாக தமிழ் மக்கள் அன்பு, கருணை, காருண்ணியம் நிறைந்த அகிம்ஷாவழி முறைமையே கடைப்பிடித்தார்கள். அப்போது இடைநிலைக்கல்வி, உயர்நிலைக் கல்வி வரை கற்போரின் எண்ணிக்கையும் ஒரு வரையறைக்குள்ளேயே இருந்தது.

ஏனெனில், ஒரு குறிக்கப்பட்ட வீதத்தினர் இடைவிலகி ஒரு தொழிலுக்கு சென்று விடுவார்கள். பெற்றோர்கள் மத்தியில் கல்விசார் விழிப்புணர்வு குறைவாகவே இருந்தது. இச்சூழ்நிலையில் குறிப்பிட்ட கல்விமான்கள் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நல்ல அதிபர்களாய் சாதி, சமய, வர்க்க வேறுபாடு இல்லாமல் மாணவர்கள் அனைவரையும் பாடசாலையில் அனுமதித்து கற்பதற்கான சமவாய்ப்பை வழங்கினார்கள்.

இலவசக் கல்விமுறை பக்கபலமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நல்ல அதிபர்களாக நினைவு கூரத்தக்கவர்கள் ஒறேற்றர் சுப்பிரமணியம், ஜெயரண்டம், பேரின்பநாயகம், வைத்தியலிங்கம், கார்த்திகேயன் போன்றோரை குறிப்பிடலாம். இவர்கள் நல்ல தொரு சமூக கட்டமைப்பு வரை காத்திரமான பங்களிப்பை வழங்கினார்கள்.

1977, 1983 களில் ஏற்பட்ட இனக்கலவரங்கள், தமிழ் அரசியல் தலைவர்களின் உணர்ச்சி ததும்பிய ஊக்குவிப்புக்களால் இளைஞர்கள் வன்முறைப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

பல இயக்கங்கள் வெவ்வேறு அரசியல், இராணுவ மூலோபாயங்களுடன் தோன்றி வளர்ந்தன. அவர்களுள் இறுதி வரை களத்தில் நின்று போராடிய விடுதலைப் புலிகள் அரசியல், சமூக இலக்குகளுக்கு மிகையான வன்முறைகள், பிரதான எதிரிமீதான தாக்குதல்களுக்கு சமனாக நண்பர்கள், சகோதரர்கள் மீதான தாக்குதல்கள், அழிப்புக்கள், யுத்தத்தின் போது முப்படையினர் மேற்கொண்ட தாக்குதல்கள், அழிப்புக்கள் என்றவாறான யுத்த, வன்முறை சூழலுக்குள்ளேயே எமது இளம் தலைமுறை முன்கொண்டு செல்லப்பட்டார்கள்.

1987 தொடக்கம் 1990 வரையான காலப் பகுதியில் இந்தியப் படையினரால் பெண்கள் பாதிப்படைந்தார்கள். 1995 இற்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாடு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தமையைத் தொடர்ந்து பெண்கள் மீதான பாலியல் பலாத்காரங்களும் படுகொலைகளும் ஆங்காங்கே இடம்பெற்றன. அதில் முக்கியமான ஒன்றே க.பொ.த (உயர்தர)ப் பரீட்சையை எழுதிவிட்டு வந்த மாணவி கிருஷாந்தி வன்புனர்விற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையாகும்.

இவ்வாறாக செம்மணியிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை இதே மாதிரியான கொடிய சம்பவங்கள் நடைபெறத் தவறவில்லை.

விடுதலைப் புலிகள் தமது ஆளுகையின் போது பொருண்மியம், சுற்றாடல், சிவில் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, கலாசாரம் தொடர்பான கட்டமைப்புக்களை உருவாக்கிய போதும் யுத்த மனோபாவம் காரணமாக அவை நின்று நிலைக்கவில்லை.

1996, 2009 ஆண்டுகளின் பின்னர் வடமாகாணத்தில் யாழ்க்குடாநாடு, வன்னி போன்ற பிரதேசங்களில் மீள் குடியேற்றங்கள் ஆரம்பமாகின. யுத்தத்தினால் செழிப்பான பிரதேசங்கள் பயன்பாடற்ற பிரதேசங்களாக மாறின. இவ்வாறான சிதைக்கப்பட்ட, அழிக்கப்பட்ட பிர்தேசங்களில் மக்கள் குடியேறத் தொடங்கினார்கள். குறிப்பாக தீவுப் பகுதியில் விவசாயம், மீன்பிடித் தொழில், ஏனைய தொழில்களை மேற்கொண்ட மக்கள் மெல்ல, மெல்ல குடியேறினார்கள்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் மிகக் குறைந்த தொகையினரே வாழ்ந்தனர். அவர்களுள் ஒரு கூட்டம் ஆண்கள் இல்லாத வீடுகளின் வளங்களை அபகரித்தல், பயன்பாடுள்ள மரங்களை அனுமதியில்லாமல் வெட்டுதல், கடத்தல், மணல் போன்ற இயற்கை வளங்களை அகழ்தல், குழுச்சண்டைகளில் ஈடுபடுதல், ஆலயங்களில் களவாடுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். பொலிசார் அவர்களை கைது செய்தாலும் கையூட்டம் பெற்றுவிட்டு விடுகின்றனர்.

இவ்வாறாணவர்களில் சிலரே பாலியல் தொந்தரவு, வல்லுறவு என்பவற்றிலும் ஈடுபடுகின்றார்கள். இவர்களால் பல பாடசாலை மாணவிகள், சிறுமிகள் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்; கொலை செய்யப்படுகிறார்கள்.

இவர்களில் ஒருவரே யாழ். புங்குடுதீவு மகா வித்தியாலய க.பொ.த (உயர்தர) வகுப்பு மாணவி வித்தியா.சிவலோகநாதன் ஆவார். இம் மாணவி கற்றல் என்ற குறிக்கோளுக்காக காலை 7.00 மணிக்கு பாடசாலைக்கு செல்கையில், காம வெறியர்கள் அந்த நேரத்தில் (பச்சை நேரம்) தமது பாலியல் இச்சைக்காக அவளைக் கடத்தி, கொடுமைப்படுத்தி, கொலை செய்தமை மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய வன்முறையாளர் கூட்டம் இரு தசாப்த யுத்தத்தின் எதிர்மறையான விளைவுகள் ஆவர். யுத்தத்தினால் ஏற்பட்ட தொடர் இடப்பெயர்வுகளால் குறிக்கப்பட்ட வீதமானோர் தமது கல்வியை இழந்தார்கள்.

இழந்த கல்வியை மீளப் பெறுவதற்கான செயற்றிட்டங்கள் பாடசாலைகளில் யுனிசெவ் போன்ற நிறுவனங்களின் உதவியோடு நடைமுறைப்படுத்திய போதும் அவை பெரிதாக வெற்றியளிக்கவில்லை. இத்தகையோர் 2009 இன் பின்னர் ஏற்பட்ட கலாசார சீரழிவுக்குள் உட்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

நீண்டகாலமாக எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். 2013 ஆம் ஆண்டு முதல் மாகாண சபையை அமைத்துள்ளோம். அதன்கீழ் பிரதேச சபைகள் இயங்குகின்றன. மேலும் அரசாங்கத்தின் நேரடி நிர்வாக அலகாக பிரதேச செயலகங்கள் தொழிற்படு கின்றன. மக்களின் பாதுகாப் புக்காக பொலிஸ் நிலையங்கள் உள்ளன. இத்தகைய கட்டமைப்புக்கள் இருந்தும், இவ்வாறான கொடுமைகள் நடந்தேறி வருகின்றன. இதற்கு யார் பொறுப்பு? யார் வகை கூறுவது? இதுவே நாடு பூராகவும் வெகுஜனங்களின் எழுச்சியும், மக்களின் கேள்வியாகவும் உள்ளது. தீவக கல்வி வலயம் வடமாகாணத்தில் உள்ள பன்னிரண்டு வலயங்களில் மிக விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டிய வலயமாகவுள்ளது.

வித்தியா க.பொ.த (உயர்தர) ப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளை எடுத்து யாழ்.புங்குடுதீவு மகா.வித்தியாலயத்திற்கும் தீவக கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்திருக்க வேண்டியவர். அறிவுச் சமுதாயத்தை நோக்கிய மாணவர் அபிவிருத்திக்கு இவ்வாறான செயற்பாடுகள் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சி பிரதமரை நியமிப்பதன்மூலம் 20ம் திருத்தச்சட்டத்தை நிறைவேற்றமுடியும்

## டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் ஒருவரை நியமிப்பதன் மூலம் மட்டுமே 20 ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள்சுதந்திரக்கூட்டமைப்பு அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

நாடாளுமன்றைக் கலைப்பதாக பிரதமர் விடுக்கும் எச்சரிக்கைகளுக்கு எதிர்க்கட்சி அஞ்சப் போவதில்லை.

எதிர்க்கட்சிகளின் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி புதிய பிரதமர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அல்லது சுதந்திரக் கட்சியின் பிரதமர் ஒருவரை நியமித்து 20 ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் யோசனை முன்வைத்துள்ளார். அரசாங்கத்துடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கும் எவ்வித உத்தேசமும் கிடையாது.

எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை பலமுடைய தரப்பாக நாடாளுமன்றில் செயற்படும்.

20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கத்திற்கு எவ்வித அவசியமும் கிடையாது.

20ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் என வழங்கிய உறுதி மொழியின் அடிப்படையிலேயே 19ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்கப்பட்டது.

எனினும் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியும் அளித்த வாக்குறுதிகளை தொடர்ச்சியாக உதாசீனம் செய்து வருகின்றனர் என டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக். கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# அரசியல் அமைப்பு பேரவையை புதிய பாராளுமன்றம் நிறுவும்

## விமல் கூறுகிறார்

புதிய பாராளுமன்றம் அரசியல் அமைப்பு பேரவையை நிறுவும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு பேரவையை நிறுவும்அதிகாரம்தற்போதைய நாடாளுமன்றிற்கு கிடையாது. புதிதாக நிறுவப்படும்நாடாளுமன்றின்ஊடாக அரசியல் அமைப்பு பேரவையை நிறுவ முடியும்.அரசியல் அமைப்பு பேரவைக்கு உரிய நபர்களை நியமிக்கும் பொறுப்பினை நாம் புதிய நாடாளுமன்றிடம் ஒப்படைப்போம்.

அரசியல் அமைப்புப் பேரவைக்கு அமைச்சர்கள் நியமிக்கப்படக் கூடாது. நாடாளுமன்ற உறுப்பினர்களே நியமிக்கப்பட வேண்டும். அமைச்சர்கள் நிறைவேற்று அதிகாரத்தின் ஓர் அங்கமாகும். எனவே அமைச்சர்கள் இந்தப் பணிக்கு பொருத்தமுடையவர்கள் அல்ல என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 100 | 120 | 160-200 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 70 | 50 | 100 | 60 | 50 |
| தக்காளி | 100 | 80 | 90 | 120 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 40 | 60 | 50 | 60 |
| கோவா | 160 | 120 | 100 | 120 | 100 | 200 |
| கரட் | 240 | 180 | 150 | 280 | 160-200 | 200 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 120 | 100 | 70 | 80 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 60 | 80 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 170 | 150 | 160 | 200 | 100-140 | 100 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 160 | 130 | 140 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 80 | 100 | 160 | 150 |
| கருணைக் கிழங்கு | — | 100 | 100 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 140 | 120 | 120 | 160-200 | 140 |
| லீக்ஸ் | — | 180 | 150 | 400 | 200 | 180 |
| பீற்றூட் | — | 250 | 100 | 120 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 150 | 120 | 160 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 250-350 | 350 | 300 | 400 | 400 | 400 |
| போஞ்சி | — | 200 | 200 | 200 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 120 | 80 | — | — | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 120-130 | 120 | 120 | 140 | 180 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 140 | 150 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | 200 | — |
| முள்ளங்கி | — | 80 | 50 | 120 | 50 | 50 |
| பொன்னாங்காணி | — | 30 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | — | 10 | 20 | 20 | 10 | 30 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 392


அனுசா அனு




கம்சா மோகனதாஸ்





ஸ்ரீனு ஸ்ரீனுஜா





பிரவின் தாஸ்




கஜித் கெவின்




சிவம் சக்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் ஓராண்டு சாதனைகளும் சவால்களும்

...இன்னொன்று இந்திய உச்சநீதிமன்றத்தின் செயற்பாடு. ஸ்பெக்ட்ரம் லைசென்ஸ்களை ரத்து செய்தது, நிலக்கரி ஒதுக்கீடுகளை ரத்து செய்தது, வோடோபோன் வரி விதிப்பில் அளித்த தீர்ப்பு போன்றவற்றைப் பார்த்த உலக நாடுகளின் முதலீட்டாளர்கள் **'இந்தியாவில் அரசின் கொள்கை முடிவுகளை உச்ச நீதிமன்றம் கேள்வி கேட்கிறது'** என்ற தோற்றத்தை ஏற்படுத்தியது.

இந்த இரண்டிற்கும் விடை காண முயன்றார் பிரதமர் நரேந்திர மோடி. அதற்கு முதலில் அவர் மேற்கொண்டது வெளிநாட்டுப் பயணங்கள்.

முதலில் நேபாளத்தில் ஆரம்பித்து ஓராண்டு முடியும் தறுவாயில் சீனா சென்று திரும்பினார்.

18 நாடுகளில் அவர் மேற்கொண்ட அந்த சுற்றுப் பயணத்தின் போது **'இந்தியாவில் முதலீடு செய்ய நீங்கள் வரலாம். உங்களுக்கு அரசு துணை நிற்கும்'** என்ற நம்பிக்கையை வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் மத்தியிலும்சரி, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியிலும்சரி உருவாக்கியிருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

ஜப்பான் நாடு மட்டும் அடுத்த ஐந்து வருடங்களில் 35 பில்லியன் அமெரிக்க டொலர்களில் இந்தியாவில் முதலீடு செய்யப் போகிறது என்பது அசாத்தியமான ஒப்பந்தம்.

அதேபோல், வர்த்தக ஒப்பந்தங்களில் பெரும்பாலானவை மின்சார உற்பத்தி சம்பந்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் காப்புறுதி, பாதுகாப்புத்துறை போன்றவற்றில் அந்நிய முதலீடு பெறும் சதவீதத்தை உயர்த்தினார்.

குறிப்பாக மருந்துகள், வீடு கட்டுதல் போன்றவற்றில் 100 சதவீத அந்நிய முதலீட்டுக்கு அனுமதித்திருக்கும் பா.ஜ.க. அரசின் போக்கு இந்தியாவின் வளர்ச்சிக்கு அச்சாரம் போடும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

இவற்றுக்கு எல்லாம் மேலாக **'நீதிபதிகள் நியமன ஆணையம்'** கொண்டு வந்து நீதித்துறையில் நடைபெறும் நியமனங்களில் உயர்நீதிமன்றம்முதல், உச்சநீதிமன்றம்வரை மத்திய அரசின் கையும் இருக்கும் என்ற நிலையை பிரதமர் நரேந்திர மோடி உருவாக்கியிருக்கிறார்.

இந்த நியமனச் சட்டம் தற்போது உச்சநீதிமன்றத்தின் விசாரணையிலிருக்கிறது என்பது வேறு விடயம்.

பொருளாதார ரீதியாக முன்னேற்றம், நாட்டின் மீது ஒரு மரியாதை, ஊழலற்ற அரசு அமைத்துள்ளோம் என்ற இமேஜ், நீதித்துறை அரசாங்கத்தின் திட்டங்களை ரத்து செய்யாது என்ற தோற்றம் போன்றவை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக இந்த ஒருவருட காலத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான அரசு உருவாக்கியது.

ஆனால், இந்த ஓராண்டு காலத்தில் மோடி அரசுக்கு சோதனை இல்லை என்றும் சொல்லிவிட முடியாது.

நிலம் கையகப்படுத்தும் மசோதாவில் மூன்றாவது முறையாக அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறது மோடி அரசு.

விவசாயிகளை பாதிக்கும் என்று எதிர்கட்சிகள் போராட்டத்தால் இந்த சட்டத்தைக் கொண்டு வருவதில் இன்னும் மோடி அரசுக்கு சங்கடங்கள் இருக்கிறது.

**'விவசாயிகளுக்கான பாதுகாப்பு அம்சங்களை'** அங்கீகரித்து இந்த சட்டத்தை நிறைவேற்ற பா.ஜ.க. அரசு இதுவரை முன்வரவில்லை என்பது இந்த அரசை நம்பி வாக்களித்த விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றமே.

முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் எதிர்கட்சிகளுடன் கலந்து பேசி, குறிப்பாக பிரதான எதிர்கட்சியாக இருந்த பா.ஜ.க.வின் ஒத்துழைப்பைப் பெற்று பல மசோதாக்களை சட்டமாக்கினார் பிரதராக இருந்த மன்மோகன்சிங்.

ஆனால், இந்த முறை **'அவசரச்சட்டம்'** முதலில், பிறகு எதிர்கட்சிகள் எதிர்த்தால் **'பேச்சுவார்த்தை'** என்ற பாலிசியை கடைப்பிடிக்கிறார் இந்த பிரதமர்.

இது ஜனநாயக இந்தியாவில் நாடாளுமன்றத்துக்கு கொடுக்கப்பட வேண்டிய மகத்துவத்தைக் குறைக்கும் செயல் என்று எதிர்கட்சிகள் குரல் எழுப்புகின்றன.

பா.ஜ.க. அரசு ஒரு 'கார்ப்பரேட் அரசாக' இருக்கிறது என்ற குற்றச்சாட்டு கிளம்பியிருக்கிறது.

அதை மறுக்க வருடத்துக்கு 12 ரூபாய் கட்டினால், இரண்டு இலட்சம் விபத்துக் காப்பீடு, வருடத்துக்கு 330 ரூபாய் மட்டும் கட்டினால் 2 இலட்சம் ரூபாய் உயிரிழப்புக் காப்பீடு, அமைப்புச் சாரா தொழிலாளர்கள் ஓய்வுபெறும் வயதை எட்டும் போது 1,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை மாதம் ஓய்வூதியம் கிடைக்க வழி செய்யும் **'அதல் பென்ஷன் யோஜனா'** போன்ற சமூகப் பாதுகாப்புத்திட்டங்களைக்கொண்டு வந்திருக்கிறது மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு.

ஆனாலும் **'நிலம் கையகப் படுத்துதல் மசோதாவை'** நிறைவேற்றியே தீருவோம் என்று பிடிவாதமாக இருப்பதால், பா.ஜ.க. அரசு **'கார்ப்பரேட் அரசு'** என்ற எதிர்கட்சிகளின் பிரச்சாரத்தை முறியடிக்க முடியாமல் திணறுகிறது என்றே கூறவேண்டும்.

இந்த வாக்குவாதத்தில் மோடி அரசை **'சூட், பூட் சர்க்கார்'** என்று கூற, நரேந்திரமோடியோ, **"சூட் கேஸ் சர்க்காருக்கு சூட் பூட் சர்க்கார் மேல்'** என்று திருப்பி பதிலடி கொடுத்திருக்கிறார்.

இதையெல்லாம் தவிர இதுவரை மோடி வெளிநாடுகளில் இந்தியா பற்றி உருவாக்கியிருக்கும் இமேஜ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எப்படி கை கொடுக்கப் போகிறது என்பது மிக முக்கியமான கேள்விக்குப் பதில் தேடினால், இந்த ஒரு வருடத்தில் அது பாஸிட்டிவ் அம்சமாகவே இருக்கிறது.



பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு குறைந்திருக்கிறது. அந்நிய முதலீடுகள் அதிகரித்துள்ளது. ஏற்றுமதி அதிகமாகி, இறக்குமதி குறைந்திருக்கிறது.

அடிப்படை தொழில்கள் என்று உள்ள நிலக்கரி, மின்சாரம் போன்ற எட்டு தொழில்களில் நல்ல வளர்ச்சி தெரிகிறது.

விவசாயமும் வளரும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

ஆனால், மோடி அரசுக்கு இருக்கும் மிகப்பெரிய சவால் **'மாட்டிறைச்சி சாப்பிட விரும்புவோர் பாகிஸ்தானுக்குச் செல்லலாம்'** என்பது உள்ளிட்ட பா.ஜ.க. அமைச்சர்கள் சிலரின் கருத்துக்களை கட்டுப்படுத்த முடியாமல் திணறி நிற்பதுதான்.

அதுமட்டுமின்றி, இந்துத்துவா அமைப்புகளும் **'வேற்றுமையில் ஒற்றுமை'** என்ற இந்தியாவின் கோட்பாட்டுக்கு விரோதமாக **'ஆவேசப் பேச்சுக்களை'** ஆங்காங்கே நிகழ்த்துவதுதான்.

இப்படிப்பட்ட பேச்சுக்களால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு சிக்கலாக இருக்கிறது என்று இந்திய நிதிய மைச்சர் அருண்ஜேட்லியே வெளிப்படையாக பேசி விட்ட போதும், பிரதமர் நரேந்திர மோடியின் ஆக்கபூர்வமான திட்டங்களுக்கும், முயற்சிகளுக்கும் இந்துத்துவா அமைப்புகளின் **'ஆவேசப் பேச்சுக்கள்'** முட்டுக்கட்டை போடுகின்றன என்பதுதான் இந்த முதல் வருடத்தில் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துள்ள மிகப்பெரிய சவால்.


இந்த சவாலை முறியடித்து இனிவரும் அடுத்தடுத்த ஆண்டுகளில் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு எப்படி அழைத்துப் போகப் போகிறார் நரேந்திரமோடி என்பதை தெரிந்து கொள்ளத்தான் இந்தியாவில் உள்ள **'திருவாளர் பொதுஜனம்'** ஆர்வத்துடன் காத்துக்கொண்டிருக்கிறது.

**(முற்றும்)**

எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?



மாணவி வித்தியா

20.05.2015 அன்று நீதிமன்ற வளாகத்தைப் பேரணி சூழ்ந்து விட்டதாயினும் பொலிஸார் நீதிமன்றுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கவில்லை என்றே கூறவேண்டும்.



சுவிஸ்குமார் எங்கே? வி.ரி.தமிழ்மாறன் எங்கே? என்ற கோசம் வானைப் பிளக்கிறது.

அந்தச் சந்தர்ப்பத்தில் தான் பேரணியில் நின்ற சிலர் நீதிமன்றத்தின் மீது கல்லெறியை ஆரம்பித்து வைத்தனர். அந்தோ கொடுமை! ஒரு மாணவிக்கு நடந்த அக்கிரமத்தை ஊரெல்லாம் திரண்டு கண்டித்தபோது, அதற்குச் சனமெல்லாம் பூரண ஆதரவு தந்த போது, எந்தப் பின்னணிகளும் இல்லாமல் சமூக நீதிக்கான குரல் ஒலிக்கிறது என்ற புளகாங்கிதத்தில் கண்கள் பனித்த போது,

கொல் என்றான் ஒருவன் கொலை என்றான் இன்னொருவன்... என்று மாவிட்டபுரத்துக் கந்தசுவாமி கோயிலில் நடந்த சம்பவத்தை மகாகவி உருத்திரமூர்த்தி விபரித்தது போல, யாழ்ப்பாண நீதிமன்றத்திற்குக் கல்லெறி விழுந்த போது, அந்தக் கல்லெறி நீதிமன்றத்தை மட்டுமன்றி உணர்வுபூர்வமாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் இதயங்களையும் தாக்கிக் கொண்டது.



எது நடக்கக்கூடாதோ! அது நடந்து விட்டது. பொறுப்பற்றவர்கள்- சட்டத்தை மதிக்காதவர்கள் கூட்டத்தோடு கூட்டமாக நின்று தமது சின்னத்தனத்தை அரங்கேற்றினர்.

நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடக்கின்றது என்றவுடன் அந்த இடத்தை விட்டு ஓட்டமும் வேக நடையுமாக வெளியேறியவர்கள் தங்களைப் புத்திசாலிகளாகவே கருதினர்.

இன்னுமொரு பகுதியினர் நீதிமன்ற வளாகத்தில் இருந்து வெளியேறமுடியாமல் தவித்தனர்.

கல்லெறிந்தவர்களில் முக்கியமானவர்கள் கல்லெறிதலைச் சம்பிரதாயமாக ஆரம்பித்துவைத்துவிட்டு இலாவகமாகத் தப்பிக் கொண்டனர்.

இதுவரை நேரமும் அமைதியாக இருந்த பொலிஸாரின் பொறுமை எல்லை கடந்தது.



ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்காமல் விட்டால் நீதிமன்றத்திற்கு ஆபத்து என்ற நினைப்போடு அதிரடித்தாக்குதலில் பொலிஸார் இறங்கினர்.

கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டன. எரிதல் தாங்கமுடியாமல் பலர் திக்குமுக்காடினர். பண்டார வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தர்மஅடி தாராளமாக விழுந்தது. நீதிமன்றம் தாக்கப்படும் என்று இம்மியும் எதிர்பாராமல் நின்றவர்கள் திகைத்துப்போயினர்.

பொலிஸாரின் தாக்குதலுக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடுகின்றனர்.

இந்தச் சம்பவங்களை எல்லாம் டான் (Dan) தொலைக்காட்சி நேரடியாக ஒளி பரப்பிக் கொண்டிருந்தது.

வீடுகளில் இருந்தவர்கள் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் நடந்த சம்பவங்களை நேரில் பார்த்திருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் நீதிமன்றத்தைத் தாக்கி விட்டனர். பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசுகின்றனர் என்ற செய்தி காட்டுத்தீ போல பரவ யாழ்ப்பாண நகரம் ஒரு கணப்பொழுதில் வெறிச்சோடிப் போனது. எங்கும் பொலிஸார் சூழ்ந்து கொண்டனர்.

நீதிமன்றத்தின் முன்றலில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களைப் பொலிஸார் துரத்தித் துரத்திப் பிடித்தனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவத்தைத்தரவேண்டும் என யாழ்ப்பாணப் பொலிஸார் கோரிக்கை விடுக்க, அது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் அவசரமாகக் கூடி ஆராய்கின்றனர்.

ஆயிரம் இராணுவத்தினரை அழையுங்கள் என்று பிரதமரின் உத்தரவு இருந்ததாயினும் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் ஒருவார்த்தை கேட்டுவிடுங்கள் என்று அடிக்குறிப்பில் எழுதிவிட,

மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்குத் தகவல் கொடுக்கப்படுகிறது.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதில் இராணுவத்தை அனுமதிக்காதீர்கள். அது வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்குவதாக இருக்கும் என விஜயகலா அம்மையார் கூற, இராணுவத்தை அனுப்பும் உத்தரவு கிடப்பில் போடப்பட்டது.

நீங்களே நிலைமையைக் கட்டுப்படுத்துங்கள் என்று பொலிஸாருக்கு கொழும்பிலிருந்து பதில் கிடைக்க பொலிஸார் கடுப்போடு களத்தில் இறங்கி தமக்குப் போதுமென்றளவில் 132 பேரைக் கைது செய்தனர்.

பலரைக் கைது செய்தனராயினும் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் குறிப்பிட்ட பொலிஸாருக்கு விசேட பூசையும் தட்சணையும் கொடுத்துத் தப்பித்துக்கொண்டனர்.

132 இளைஞர்கள் கைது என்பதாக செய்தி வெளியாகிறது. வெளியிடங்களில் விடப்பட்ட மோட்டார் சைக்கிள்களை அடித்து நொறுக்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர்.

எல்லா மோட்டார் சைக்கிள்களையும் சங்கிலியால் தொடுத்து அதனை வாகனத்தில் கட்டி இழுத்ததைப் பார்த்தபோது, சிங்கள இனவாதம் மீண்டும் தலைதூக்கிவிட்டதோ என்று எண்ணத் தோன்றியது.

பேரணி நடந்தபோது பொறுமையாக இருந்த பொலிஸார் சந்தர்ப்பம் கிடைத்தபோது தங்களின் மோசமான செயலை நிரூபித்துக்காட்டியமை பொலிஸ் அதிகாரம் தமிழர்களுக்குத் தேவை என்பதை மீள வலியுறுத்துவதாக இருந்தது.

(திங்கள் தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிந்த மீதான வெறுப்பு மட்டும் காரணமல்ல

# மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையே மைத்திரியின் வெற்றிக்குக் காரணம்

## த இந்து சுட்டிக்காட்டு

(சென்னை)

**இலங்கையில் சர்வாதிகார குடும்ப ஆட்சி நடத்திய மகிந்த ராஜபக்ஷவுக்கு மாற்றாக ஜனநாயக முறையிலான அரசு அமைய வேண்டும். பொறுப்பான அரசாக அது இருக்க வேண்டும் எனும் மக்களின் எண்ணம் மட்டும் மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிக்குக் கொண்டு வந்து விடவில்லை. அந்நாட்டு மக்களை வெறுப்பில் ஆழ்த்தியிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் மைத்திரியின் வெற்றிக்கு காரணம் என இந்தியாலிருந்து வெளியாகும் த இந்து பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது, இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் நடந்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி ஜனாதிபதி பதவியை மைத்திரிபால சிறிசேன கைப்பற்றுவதற்கு முக்கியமான காரணம், நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும். இலங்கையில் சர்வாதிகார குடும்ப ஆட்சி நடத்திய மகிந்த ராஜபக்ஷவுக்கு மாற்றாக, ஜனநாயக முறையிலான அரசு அமைய வேண்டும். பொறுப்பான அரசாக அது இருக்க வேண்டும் எனும் மக்களின் எண்ணம் மட்டும் மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிக்குக் கொண்டு வந்து விடவில்லை. அந்நாட்டு மக்களை வெறுப்பில் ஆழ்த்தியிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்குக் காரணம்.

அவற்றில் மிக முக்கியமானது இராணுவமயமாக்கல். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்குப் பின்னர், இலங்கையில், குறிப்பாக தமிழர்கள் அதிகம் வாழும் வடமாகாணங்களில், இராணுவத்தின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டது, விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை எனும் காரணத்தைக் காட்டித்தான். ஆனால், இலங்கை உள்நாட்டுப் போருக்குப் பின்னர் நடந்த தேர்தல்களில் தமிழர்கள் அதிக அளவில் பங்கேற்ற பின்னரும், தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவம் குவிக்கப்பட்டது ஏற்றுக்கொள்ளவே முடியாதது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது தமிழர்கள் வாழும் பகுதிகளில் வணிக நடவடிக்கைகள், வளர்ச்சித் திட்டங்கள், கல்வி, சுற்றுலா, ஏன் காவல் துறையின் பணிகள் உட்பட பல்வேறு பணிகளில் ஈடுபட இராணுவத்துக்கு அனுமதியளிக்கப்பட்டது. ஆபத்தான இந்தப் போக்கு மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் உடனடியாகக் கைவிடப்படும் என்பது சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

டிசம்பர் 2014 முதல் ஜனவரி 2015 வரை அமெரிக்காவின் 'ஓக் லாண்ட்' நிறுவனம் நடத்திய ஆய்வுகளின் முடிவுகள், இலங்கை அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இணக்கமான நிலைப்பாட்டுக்கு வாய்ப்புகள் இல்லை என்று தெரிவிக்கின்றன.

உள்நாட்டுப் போரின் போது இடம்பெயர நேர்ந்த தமிழர்களின் நிலப்பகுதிகளை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டது தமிழர்களின் கடும் அதிருப்திக்குக் காரணமாக இருக்கிறது.

தமிழர்கள் வாழும் மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் விவகாரம் நீண்டகாலம் இழுபறியாக இருப்பது தெரிந்த விடயம் தான். மறுசீரமைப்பு நடவடிக்கைகள், போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணை போன்ற விடயங்களில் தமிழர்களின் எதிர்பார்ப்புகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

வட மாகாணத்தைப் பற்றி அண்மையில் 'த இந்து' ஆங்கில நாளிதழில் வெளியான செய்தியின்படி, இராணுவத்தின் வசம் இருந்த தமிழர்களின் நிலப்பகுதிகளை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் மறு வாழ்வுக்கான புதிய குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நடவடிக்கைகளும்வரவேற்கத்தக்கவை.

ஆனால், இவை மட்டும் போதாது. இராணுவ மயமாக்கல் ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பதை அரசு உணர வேண்டும்.

பாகிஸ்தானில் நடக்கும் விடயங்கள் இதற்கு உதாரணம். சர்வதேச அளவிலான அழுத்தம் மற்றும் தேர்தல் முடிவுகள், தமிழர்கள் விடயத்தில் சிறிதளவேனும் முன்னேற்றம் ஏற்படக் காரணமாக அமைந்திருக்கின்றன. ஆனால், தமிழர்கள் பகுதியில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தை விலக்கிக் கொள்வது உள்ளிட்ட விடயங்களில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டால்தான், இலங்கையில் சகஜ நிலை திரும்பும் என்பதை அரசு உணரவேண்டும் என மேலும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

# இலங்கையில் மரண தண்டனையை அமுல்படுத்துவது ஏற்கவே முடியாது

### ஐரோப்பிய ஒன்றியம்

இலங்கையில் மரண தண்டனை அமுல்படுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எவ்வாறானதொரு சூழ்நிலையிலும் மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே ஆட்சியில் இருந்த அரசாங்கங்களுக்கும் மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டாம் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியிருந்தது. இந்நிலையிலேயே தற்போதைய அரசாங்கத்திடமும் அதனை கோருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் மரண தண்டனை அமுல்படுத்தப்படுவது குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் போதைப்பொருள் பயன்படுத்துவோருக்கு எதிராக மரண தண்டனை அமுல்படுத்தப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சில தினங்களுக்கு முன்பு அறிவித்திருந்தார்.

இதேவேளை, ஏற்கனவே நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் மரண தண்டனையை அமுல்படுத்த தயங்கப்போவதில்லை என தெரிவித்திருந்தார். இலங்கையில், மிக நீண்ட காலமாக மரண தண்டனை நிறைவேற்றப்படாத சூழ்நிலையில், நாட்டில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் பாலியல் குற்றச் செயல்கள் மற்றும் கடத்தல்களை தடுக்கும் நோக்கில் ஜனாதிபதி மற்றும் நீதியமைச்சர் ஆகியோர் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

## மனிதரை கொல்லும் யுகம் வேண்டுமாயின் மகிந்தவை அதிகாரத்திற்கு கொண்டுவரவும்

மனிதர்களை கல்லெறிந்து கொல்லும் யுகம் ஒன்று வேண்டுமாயின் மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை அதிகாரத்திற்கு கொண்டு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொலன்னாவ தொகுதி அமைப்பாளரான மேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொம்பனித்தெருவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பது நாட்டில் நடக்கும் பாரதூரமான குற்றமாக மகிந்த ராஜபக்ஷவின் சகாக்கள் காண்கின்றனர். (இ-5)

# வாஸின் மனைவியையும் மகனையும் மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவின் மனைவி ஷியாமினி பிரியதர்ஷினி பெரேரா மற்றும் அவரது இளைய மகன் தினுஷ வாஸ் குணவர்தன ஆகியோரை நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆயுதங்கள், வெடி பொருட்களை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் கொண்டு சென்றமை தொடர்பில் மூன்று பேர் சட்டமா அதிபரினால் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேற்படி இருவர் உள்ளிட்ட மேலும் ஒருவரே இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் முன்னிலையில் இடம்பெற்றபோது. குறித்த மூவரையும் சட்டமா அதிபர் பெயரிட வேண்டும் என்று இரகசிய பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

ஆகவே, இவர்கள் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி அம்பலவாணர் தங்கமுத்து**

சாயுடைமாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஆலங்குழாய் றோட் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தங்கமுத்து கடந்த 3ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி கந்தசாமி இராஜேஸ்வரி**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராஜேஸ்வரி நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**செல்லையா இராசையா**

**(இளைப்பாறிய கணக்காளர்)**

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசையா கடந்த 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணி தொடக்கம் பி.ப.3 மணிவரை Elgin mills cemetery, 1591 Elgin mills.Rd. E, Richmond Hill, ON L4S Lmg. Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கக்கூடாது

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

**புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு மீண்டும் இலங்கையில் பிரஜாவுரிமை வழங்குவது சாத்தியமற்றது. அவர்களை மீண்டும் நாட்டுக்குள் அனுமதிக்க முடியாது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமே இலங்கையில் தமிழர் எண்ணிக்கை குறையக் காரணமாகும். இதற்கு யுத்தத்தை காரணம் காட்டுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.**

ஜாதிக ஹெல உறுமயவினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு மீண்டும் இலங்கையில் பிரஜாவுரிமை வழங்க வேண்டும் என இங்குள்ள தமிழ் அரசியல் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் இது ஒரு சந்தர்ப்பத்திலேனும் சாத்தியமற்றதாகும். இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் இடம்பெயர்ந்த மற்றும் அகதிகளாக வெளியேறிய மக்களை விடவும் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கையே அதிகமாகும். இந்த ஒப்பந்தத்தின் மூலமாக ஐந்து இலட்சம் தமிழர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். இதுவே இலங்கையில் தமிழ் மக்களின் எண்ணிக்கை வீதம் குறைவடைய காரணமாகும்.

தீக்சித்- அதுலத்முதலி ஒப்பந்தத்தின் மூலமாக இலங்கையில் ஒரு இலட்சம் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. அதேபோல் இந்தியாவில் 65ஆயிரம் தமிழர்கள் பிரஜாவுரிமை அந்தஸ்து வழங்கி குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறான நிலையில் இலங்கையில் இருந்து வெளியேறிய தமிழ் மக்களை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வருவது என்பது சாத்தியமற்ற விடயமாகும்.

ஆனால் இன்று தமிழ்த் தலைமைகள் யுத்தத்தை காரணம் காட்டி இலங்கையில் இருந்து வெளியேறிய தமிழ் மக்களை மீண்டும் இலங்கைக்கு கொண்டுவர வேண்டும் எனவும் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கவேண்டும் என்பதையும் வலியுறுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

ஆகவே புலம்பெயர் மற்றும் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு வரவழைக்க முடியாது.என அவர் மேலும் தெரி வித்தார். (இ-5)

# மீனவர்கள் பேச்சுவார்த்தையை விரைவில் தொடங்க வேண்டும்

(சென்னை)

இந்தியா-இலங்கை ஆகிய இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தையை விரைவில் தொடங்க வேண்டும் என்று த.மா.கர. தலைவர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 14 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். இது மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, மீனவர் பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்.

இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தையை விரைவில் தொடங்கி நடத்த வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தை முடியும் வரை தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கவோ, சிறைபிடிக்கவோ கூடாது என்று இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (இ-5)

# டாப்10 குற்றவாளிகள் படத் தேடலில் மோடி

## மன்னிப்புக் கோரியது கூகுள்

பிரபல தேடியந்திர தளமான கூகுளின் புகைப்படப் பிரிவில் "டாப் 10 குற்றவாளிகள்" என்று தேடினால் பிரதமர் நரேந்திர மோடியின் படம் இடம்பெறுவதற்கு அந்நிறுவனம் மன்னிப்புக் கோரியுள்ளது.

இது குறித்து கூகுள் நிறுவன செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறும்போது, இந்த தேடல் முடிவுகள் எங்களை மிகவும் பாதித்துள்ளது. இது எந்த வகையிலும் எங்கள் நிறுவனத்தின் கருத்து அல்ல. சில நேரங்களில் இதுபோன்ற குறிப்பிட்ட கேள்விகளுக்கான தேடலின் முடிவில் இத்தகைய வியப்புக்குரிய பதில்கள் கிடைக்கும்.

"டாப் 10 கிரிமினல்கள்" என்ற ஆங்கிலத் தேடலில், பிரதமர் மோடியின் படங்கள் இடம்பெற்று ஏற்படுத்திய குழப்பங்கள், தவறான புரிதல்களுக்கு நாங்கள் மன்னிப்புக் கோருகிறோம். இது மாதிரியான எதிர்பாராத முடிவுகள் வருவதை தடுக்க நாங்கள் எங்கள் அல்காரிதம்களை மேம்படுத்த தொடர்ந்து முயன்று வருகிறோம்" என்றார்.

மேலும் அவர் கூறும்போது, சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள "டாப் 10 கிரிமினல்கள்" என்ற தேடலுக்கு விடையாக மோடியின் படம் கிடைக்கக்காரணம், பிரிட்டிஷ் நாளிதழ் ஒன்று மோடியின் புகைப்படத்தையும் தவறான மெட்டா-டேட்டாவையும் பயன்படுத்தியதே ஆகும். அந்தப் பத்திரிகை, கிரிமினல் பின்னணி கொண்ட அரசியல்வாதிகள் குறித்த செய்திக் கட்டுரைகளில் பயன்படுத்தியிருந்த சில புகைப்படங்களும், குற்றப் பின்னணி கொண்ட அரசியல்வாதிகள் குறித்த மோடியின் பேச்சு தொடர்பான செய்திகளில் பயன்படுத்தப்பட்டிருந்த புகைப்படங்களுமே, கூகுள் தேடலில் பிரதிபலித்துள்ளது.

இருப்பினும் அந்தக் குறிப்பிட்ட பிரிட்டிஷ் செய்தித்தாள் எந்த வகையிலும் மோடியை கிரிமினல் நடவடிக்கைகளுடன் இணைந்து செய்தி வெளியிடவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறேன். மோடி,கிரிமினல் நடவடிக்கை என்ற வார்த்தைகள் அருகருகே இடம்பெற்றிருந்ததே இந்தக் குழப்பத்துக்கு காரணம்" என்றார். (இ-5)

# இது சர்வதேச அகதிகளின் வலி

கேட்பாரற்று காற்றில் கரைந்த ஈழ அகதியின் துயர்மிக்க குரல், சர்வதேச அரங்கில் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. ஈழ எழுத்தாளர் ஷோபா சக்தி ஹீரோவாக நடித்த "தீபன்' திரைப்படம், புகழ்பெற்ற "கேன்ஸ்' திரைப்பட விழாவில் "பாம்தோர்' (தங்கப் பனை) விருது வென்றிருக்கிறது.

இது ஒரு பிரெஞ்சுப் படம். ஆனால், ஈழ அகதிகளின் வலிகளைப் பேசும் படம். 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் இருந்து தப்பிக்கும் மூன்று பேர், பிரான்ஸ்"க்குள் அகதிகளாக நுழைகிறார்கள். அங்கே அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சிக்கல்களே "தீபன்'. "இது ஈழ அகதிகளின் வலி மட்டும் அல்ல... சர்வதேச அகதிகளின் வலி' என்கிறார் படத்தின் இயக்குநர் ழாக் ஓதியாக். தனது படங்களுக்காக கேன்ஸ் திரைப்பட விழாவில், ஏற்கனவே இருமுறை விருதுகளைத் வென்றிருக்கும் இவர், பிரெஞ்சு சினிமாவின் தந்தை மிக்கேல் ஓதியாக்கின் மகன்..

ஷோபா சக்தியுடன் நடித்திருக்கும் காளீஸ்வரி, சென்னையைச் சேர்ந்த நாடகக் கலைஞர். "மெட்ராஸ்' திரைப்படத்தில் மாரியாக நடித்த வினோத்தின் மனைவி. இவர்களோடு க்ளோடின் என்கிற சிறுமியும் நடித்திருக்கிறாள். ஈழத் தமிழை அழகாகப் பேசும் க்ளோடின், தற்போது பிரான்ஸ்வாசி. வரும் ஓகஸ்ட் 26ஆம் திகதி உலகம் முழுவதும் "தீபன்' வெளியாகவுள்ள நிலையில் பிரான்ஸில் வசித்துவரும் ஷோபா சக்தியை தொலைபேசியில் பிடித்தேன்.

"எல்லா தமிழர்களையும் போல நானும் சினிமா வெறியன் தான். தீவிர எம்.ஜி.ஆர் ரசிகன். சின்ன வயதில் நாடகம், கூத்து என நடித்திருக்கிறேன். விடுதலைப் புலிகள் அமைப்பின் "விடுதலைக் காளி' கூத்தில்கூட நடித்திருக்கிறேன். கடந்த மாதம் கனடாவில் நான் எழுதிய நாடகம் ஒன்று அரங்கேற்றம் கண்டது. லீனா மணிமேகலை இயக்கிய "செங்கடல்' படத்துக்கு திரைக்கதை, வசனம் எழுதி, சிறிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தேன். அவ்வளவுதான் என் சினிமா அனுபவம். இப்போது, இலங்கைப் பிரச்சினையை சர்வதேச அரங்கில் பேசும் "தீபன்' என்ற ஓர் உலகப் படத்தில் என் பங்களிப்பும் இருப்பதில் எனக்கு பெரும் மகிழ்ச்சி" என்கிறார்.



ஷோபா சக்தி

"தீபன்' படத்தில் முக்கிய கதாபாத்திரங்கள் பேசும் தமிழ் வசனங்களை எழுதியது ஷோபா சக்தி.

"படம் தொடங்குவதற்கு முன்பே படக் குழுவினர், இலங்கைப் பிரச்சினை குறித்து நீண்ட ஆய்வை செய்துவிட்டுத்தான் வேலையைத் தொடங்கினார்கள். நான் உள்ளே சென்றதும் மேற்கொண்டும் அது குறித்து நிறைய விவாதித்தோம்.

படம் நெடுக, திரைக்கதையில் பல சின்னச் சின்ன விடயங்களைச் சேர்த்ததில் என் பங்கும் உண்டு. படத்தில் 80 சத விகித வசனங்கள் தமிழ் தான்" என்கிறார் ஷோபா சக்தி.

"பிரெஞ்சு விமர்சகர்கள் சிலர், "தீபன்', அழகான காதல் படம் என்கிறார்களே?"


"ஆமாம்... வழக்கமா நம் தமிழ் இயக்குநர்கள் சொல்வாங்களே... "இதுவரை சொல்லப்படாத கோணத்தில் 'D. அப்படியும் சொல்லலாம்.காதலை இதுவரை பார்த்திராத கோணத்தில் இயக்குநர் சொல்லியிருக்கிறார். இவரது சிறப்பே, உண்மைக்கு மிக நெருக்கத்தில் இருந்து மனித உணர்வுகளைச் சொல்வது தான். யுத்தத்தின் வடுக்களை யும் படம் பிடித்திருக்கிறோம். அந்தப் பின்னணியில் வாழ்க்கையைத் தொலைத்த இருவருக்கு இடையில் ஒரே ஆறுதலாக இருக்கும் காதலையும் சொல்லியிருக்கிறோம்" என்கிற ஷோபா சக்தி, "அரசியல் பேசும் திரைப்படங்களுக்கு திரைக்கதை, வசனம் எழுதுவதுடன் நடிக்கவும் தயார் என்கிறார்.

"நீங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இயங்கியவர். அந்த அமைப்பின் மீது கடும் விமர்சனங்களையும் செய்துவருபவர். இலங்கைப் பிரச்சினையை மையமாக வைத்து எடுக்கப்படும் சர்வதேச படத்தில் பணிபுரியும் போது, சில சமரசங்களை செய்து கொள்ள நேரிட்டிருக்குமே?

"20 வருடங்களாக ஈழ மக்களின் வலிகளையும் புலம்பெயர்ந்த மக்களின் சிக்கல்களையும் எழுதி வருகிறேன். அதன் நீட்சி தான் "தீபன்'.

இதில் நான் முரண்படுவதைப் போன்ற விடயங்கள் எங்கும் இல்லை. கேன்ஸ் திரைப்பட விழாவில் "தீபன்' திரையிடப்பட்ட பின்பு, இலங்கைப் பிரச்சினை சர்வதேச அளவில் மீண்டும் பேசுப்பொருளாகியிருக்கிறது. இலங்கை அரசாங்கம் நடத்திய இனப்படுகொலை யுத்தத்துக்காக, உலக மக்களிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற அழுத்தத்தை "தீபன்' ஏற்படுத்தியிருக்கிறது!"

-ஜுனியர் விகடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுப் படையின் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 24பேர் பலி!

சிரியாவில் அரசுப் படையினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நிகழ்த்திய பேரல் வெடிகுண்டுத் தாக்குதலில் 8 சிறுவர்கள் உட்பட 24 பேர் உயிரிழந்ததாக சிரியா மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் இயக்குநர் ரமி அப்தெல் ரஹ்மான் தெரிவிக்கையில்,

சிரியாவின் அலெப்போ மாகாணத்திலும், இத்லிப் மாகாணத்திலும் சிரியா போர் விமானங்கள் பேரல் வெடிகுண்டுகளை வீசின.

இதில் அலெப்போ மாகாணத்தில் 16 பேரும், இத்லிப் மாகாணத்தில் 8 பேரும் உயிரிழந்தனர்.

அலெப்போ மாகாணத்தில் பலியான 16 பேரில் 8 பேர் சிறுவர்கள் என்றார் அவர்.

விமானத்திலிருந்து வீசப்படும் வழக்கமான குண்டுகளுக்குப் பதிலாக, கையில் கிடைக்கும் கொள்கலன்களில் வெடிமருந்தையும், கூர் பொருட்களையும் நிரப்பி உருவாக்கப்படும் பேரல் குண்டுகளை சிரியா அரசுப் படையினர் பயன்படுத்தி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. மிகவும் மலிவான இந்தக் குண்டுகள், பெரும் சேதத்தை விளைவிப்பவை எனக் கூறப்படுகிறது. (இ-5)

## தென்கொரியாவில் 'மெர்ஸ்' பீதி; பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

தென்கொரியாவில் உயிர்க் கொல்லி வைரஸான மெர்ஸ் (மிடில் ஈஸ்ட் ரெஸ்பிரேட்டரி சிண்ட்ரோம்) வைரஸ் பரவிவருவதையடுத்து, அந்த நாட்டின் 200 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

அந்த நாட்டில் மெர்ஸ் வைரஸ்ஸுக்கு 58 வயது பெண் ஒருவரும், 71 வயது ஆண் ஒருவரும் பலியானதாக சுகாதாரத் துறை அறிவித்தது. அந்த வைரஸ், மேலும் பலருக்குப் பரவி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை 30 பேரை மெர்ஸ் வைரஸ் தாக்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மெர்ஸ் வைரஸ், கடந்த 2003 ஆம் ஆண்டு நூற்றுக்கணக்கானோர் உயிர்களை பலி வாங்கிய சார்ஸ் வைரஸின் ரகத்தைச் சேர்ந்தது. சார்ஸ் வைரஸ் போல அதிவேகமாகப் பரவும் தன்மை மெர்ஸ் வைரஸுக்கு இல்லை என்றாலும், அதுவும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது.

இந்த நிலையில், தென் கொரியாவில் முதல் முறையாக மெர்ஸ் வைரஸ் பரவி, இருவர் உயிரிழந்தது அந்த நாட்டில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. 2012ஆம் ஆண்டிலிருந்து இந்த நோய்க்கு இதுவரை 400-க்கும்மேற்பட்டவர்கள் பலியாகினர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)




# உலகநாடுகளின் வான்வழித் தாக்குதலில் 10,000 ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பலி

### அமெரிக்கா தெரிவிப்பு

(டமாஸ்கஸ்)

**சிரியா, ஈராக்கில் அமெரிக்கா தலைமையி லான உலகநாடுகள் படை நடத்திய வான் வெளித் தாக்குதலில் 10 ஆயிரம் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.**



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம்

ஈராக்கில் கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடங்கி சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள், ஷியா முஸ்லிம் அரசு படையினருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி, தாக்குதல்கள் தொடுத்து வந்தனர். இந்த நிலையில் கடந்த வருடம் ஜுன் மாதம் 9 ஆம் திகதி அவர்கள் அதிரடியாக நாட்டின் 2 ஆவது பெரிய நகரமான மொசூலை தங்கள் பிடியின்கீழ் கொண்டு வந்தனர். அதைத் தொடர்ந்து மேலும் தாக்குதல்கள் தொடுத்து நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு பகுதி நகரங்களை கைப்பற்றினர்.

சிரியாவிலும் இதேநிலையே நீடித்தது. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள்வசம் பலநகரங்களை கொண்டு வந்தனர். ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் தாங்கள் கைப்பற்றிய நிலப்பரப்பை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இஸ்லாமிய தேசமாக அறிவித்தனர். தொடர்ந்து அவர்கள் முன்னேறினர். இந்நிலையில் ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்த வேண்டும் என்று ஈராக்கும், குர்திசும் தொடர்ந்து வலியுறுத்தியது.

ஒபாமா உத்தரவு

இந்த நிலையில், ஈராக்கில் அமெரிக்கர்களைப் பாதுகாக்கவும், சிறுபான்மையினர் நலனைக் காக்கவும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து வான்வழி தாக்குதல் நடத்த உத்தரவிட்டு இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி அதிரடியாக அறிவித்தார். ஈராக் மற்றும் குர்திஷ் படை களுக்கு ஆதரவாக வான்வழித் தாக்குதல் நடத்தப்படும். அதே நேரத்தில் ஈராக்கில் தரைவழியில் தாக்குதல் நடத்துவதற்கு துருப்புக்களை அனுப்பி வைக்கப்படாது. ஈராக்குடன் இன்னுமொரு போர் புரியவும் விருப்பம் இல்லை என்று ஒபாமா கூறினார்.

உலகநாடுகள் அதிரடி தாக்குதல்

இதற்கிடையே ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களிடம் பிணைய கைதியாக சிக்கியுள்ளவர்களை தலையை துண்டித்து கொன்று வெறியாட்டம் ஆடினர்.

இதனையடுத்து ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் தாக்குதல் தொடுத்து வருகிறது. அப்போது சிரியாவின் மீது அமெரிக்கா மற்றும் அதன் அரபு கூட்டாளிகள் பார்வை திரும்பியது. சிரியாவிலும் அமெரிக்காவும், அரபு நாடுகளும் கூட்டாக வான்வழித் தாக்குதலை தொடங்கியது.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வலுவாக இருந்த ரக்கா உட்பட பல்வேறு பகுதிகளில் அமெரிக்காவும், அதன் அரபு கூட்டாளிகளும் வான் வழி தாக்குதல்கள் நடத்தியது. தொடர்ந்து அமெரிக்கா தலைமையிலான உலக நாடுகள் படை சிரியா மற்றும் ஈராக்கில் தாக்குதல் நடத்தி வருகிறது.

10 ஆயிரம் தீவிரவாதிகள் பலி

சிரியா, ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான உலகநாடுகள் படை நடத்திய வான்வெளி தாக்குதலில் இதுவரையில் 10 ஆயிரம் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்கா அதிகாரி பலின்கென் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அவர் இப்போரில் பலியான பொதுமக்கள் எத்தனை பேர் என்பதை தெரிவிக்கவில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டதை தொடர்ந்து, தீவிரவாதிகள் தொடர்ந்து இயக்கத்திற்கு ஆள் சேர்த்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சிரியாவின் வடகிழக்குப்பகுதியில் முன்னேறிய ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத படையை குர்திஷ் படை தடுத்து நிறுத்தியுள்ளது. குர்திஷ் படை அமெரிக்க இராணுவ உதவியுடன், முக்கியமான நகரங்கள் மற்றும் கிராமங்களை திரும்ப அடைந்துள்ளது. துருக்கி எல்லையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் உள்ள தெல் அப்யாத் நகரை நோக்கி குர்திஷ் படை சென்று கொண்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## பங்களாதேஷ் பெண் எழுத்தாளர் அமெரிக்காவுக்கு இடப்பெயர்வு

சர்ச்சைக்குரிய பங்களாதேஷ் பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்துள்ளார். நியூயோர்க்கைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் அவர் அமெரிக்காவில் வசிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பங்களாதேஷில் மதச்சார்பற்ற இணையத்தள எழுத்தாளர்கள் மூவர் மத அடிப்படைவாதிகளால் கொலை செய்யப்பட்டதை அடுத்தே அவர் இடம்பெயர்ந்துள்ளார்.

தஸ்லிமா நஸ்ரின் அடுத்த இலக்கு என முஸ்லிம் அடிப்படைவாதிகள் தெரிவித்துள்ளனர்.



அமெரிக்காவில் வசிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ள சி.ஐ.எப். என்ற தொண்டு நிறுவனம் அவருக்குத் தேவையான நிதியை திரட்டி வருகிறது.

பங்களாதேஷைச் சேர்ந்த பெண் எழுத்தாளரான தஸ்லிமா நஸ்ரின் கடந்த 1994ஆம் ஆண்டு முதல் முஸ்லிம் அடிப்படைவாதிகளால் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருகிறார். கடந்த 20 வருடங்களில் அவர் அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இடம்மாறி வாழ்ந்து தனது எழுத்துப் பணியை தொடர்வது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சர்வதேச அளவில் தேடப்படும் 6பேர் இண்டர்போலால் அறிவிப்பு

பிபாவுடன் தொடர்புடைய ஆறு பேரை சர்வதேச அளவில் தேடப்படும் நபர்களாகக் கூறி சர்வதேச பொலிஸ் அமைப்பான இண்டர்போல் அறிவிப்பு ஒன்றை வெளிட்டுள்ளது.

அவர்கள் மீது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் நான்கு பெரு நிறுவன அதிகாரிகள் மற்றும் பிபாவின் இரண்டு முன்னாள் அதிகாரிகளும் உள்ளனர்.

தேடப்படும் நபர்களாக அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு பிபா அதிகாரிகளில் முன்னாள் துணைத் தலைவர் ஜாக் வார்னரும் ஒருவர்.

இந்த ஆறு பேரும் மீது அமெரிக்க நீதித்துறை அதிகாரிகள், ஏற்கனவே குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இண்டர்போல் மூலம் விடுக்கப்பட்டுள்ள "சிவப்பு அறிக்கையானது" பெயரிடப்பட்டுள்ளோரை கைது செய்து நாடு கடத்த கோருகிறது.

எனினும் அதில் பெயரிடப்பட்டுள்ள யாரையும் தடுத்து வைக்கும்படி எந்த நாட்டையும் இண்டர்போல் நிர்பந்திக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐந்து ரூபாய் குற்றி மணிமாலை உன் கழுத்துக்குப் பொருத்தமடி.
- புதுக் கவிஞர்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கில் சில்லறைத் தட்டுப்பாடு தேவலோகத்தில் அவசர மாநாடு

வடக்கில் நிலவிவரும் சில்லறைக் காசுத் தட்டுப்பாடு தொடர்பில் தேவலோகத்தில் அவசர மாநாடு கூடுவதாக ஒரு கற்பனை.

தலைவர்:இந்திரன், செயலாளர்:சித்திரகுப்தன், உறுப்பினர்கள்:நந்திதேவர், யமதர்மராஜன், பிரம்மா, சூரியபகவான் உள்ளிட்ட தேவர்கள்.

இதோ மாநாடு ஆரம்பமாகின்றது.

**இந்திரன்:**சித்திரகுப்தா! அவசர மாநாடு எதற்காகக் கூடுகிறது என விரிவாகச் சபைக்குக் கூறுங்கள்.

**சித்திர:**சுவாமி! இலங்கையின் வடபுலத்தில் சில்லறைக்காசுகளுக்குப் பெருந்தட்டுப்பாடு. இதனால் சாதாரண சனங்கள் கடைக்குச் செல்லும்போது கடவுளை மிக உருக்கமாகத் தியானிக்கின்றனர்.

கடவுளே! கடைக்காரர் சில்லறைக் காசுக்குப் பதிலாக இனிப்பு வகைகளைத் தந்து கணக்கை முடித்து விடக்கூடாது. காசுத்தட்டுப்பாடு. இந்நிலையில் ஒவ்வொரு நாளும் 10 ரூபாய், 15 ரூபாய் சில்லறை இல்லை என்றால் எவ்வளவு நட்டம். சலரோக வியாதியும் இருக்கும்போது ஏழை மனம் சொல்லுக் கேளாமல் சில்லறைக்குப் பதிலாகத் தந்த இனிப்பை வாயில் போட, மெற்போமின் குளிசைச் செலவு கூடிவருகிறது.

கடவுளே! சில்லறையைத் தருவதற்கு அருள் பாலி என்று வரம் கேட்பதால்,

சாட்சாத் ஈஸ்வரனின் ஏற்பாட்டில் இந்த மாநாடு நடைபெறுகிறது சுவாமி.

ஈஸ்வரனின் கட்டளைப்படி நந்திதேவர் வடபகுதிக்குச் சென்று சில்லறைத் தட்டுப்பாட்டிற்கான காரணத்தையும் கண்டறிந்து வந்துள்ளார்.

**இந்திரன்:**-நந்திதேவரே! நீங்கள் கண்டறிந்த காரணத்தை முன்வையுங்கள்.

**நந்திதேவர்:**-பிரபு வணக்கம். சில்லறைத் தட்டுப்பாடு தொடர்பில் வடபகுதிக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தேன். வடபகுதியில் சில்லறைக் காசுகள் நிறையவே இருக்கின்றன. ஆனால் அவை பணச் சுற்றோட்டத்தில் இருந்து விலகியுள்ளன.

**யமதர்ம:**நந்திதேவரே சில்லறைக்காசு இருக்கும் போது எங்ஙனம் தட்டுப்பாடு ஏற்பட முடியும்?

**நந்திதேவர்:**பிரபு! வடபகுதியில் உள்ள சில்லறைக் காசுகளில் பெரும்பாலானவை குபேரன் சிலைகளில் கொட்டப்பட்டுள்ளது. இதுதவிர இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் இருக்கக்கூடிய உண்டியல்களில் சில்லறைக்காசு குவிந்துள்ளன. அதேநேரம் இலங்கை மத்திய வங்கி 10 ரூபாய் உலோக நாணயங்களை வெளியிட்டபோது, மாவட்ட ரீதியாக 10 ரூபாய் குற்றிகளை வெளியிட, வடபகுதி மாணவர்கள் மாவட்ட ரீதியாக 10 ரூபாய் குற்றிகளை சேர்க்க ஆரம்பித்து விட்டனர். இதனால் சில்லறைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு.

**பிரம்மா:**சபைத் தலைவருக்கு வணக்கம். வட பகுதியில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தன் உருவத்தின் மீது சில்லறைக்காசுகளைக் கொட்டுவதால் தனக்கும் பெரும்பாரமாக இருப்பதாக குபேரன் என்னிடம் பல தடவை முறையிட்டுள்ளார்.

பணத்தை நானே வழங்க வேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தார் எனக்கு சில்லறைக்காசுகளை கொட்டி விடுகின்றனர். இதனால் நான் அவர்களுக்கு பணத்தை வழங்க முடியாமல் இருக்கிறேன் என்று குபேரன் என்னிடம் குறைப்பட்டுக் கொண்டார்.

**நந்தி:**-ஆம் பிரபு. கோயில் உண்டியல்களில் குவியும் சில்லறைகளை உடனுக்குடன் பணச் சுற்றோட்டத்திற்கு அனுப்பாமல் விடுவதால், தெய்வங்களும் சில்லறைப் பாரத்தால் திணறுகின்றனர்.

**இந்திரன்:**-இதனால்தான் ஈஸ்வரன் இந்த மாநாட்டைக் கூட்டும்படி எனக்கு உத்தரவிட்டார். இந்த மாநாடு பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்று கிறது.

- குபேரன் சிலைகளில் இருக்கும் சில்லறைகளை உடனடியாக கடைகளில் கொடுத்து தாளாக மாற்றுதல்.
- ஆலய பரிபாலன சபைகள் கிழமைக்கு ஒரு தடவையேனும் உண்டியல்களைத் திறந்து அங்கிருக்கும் சில்லறைகளை காசுச் சுற்றோட்டத்திற்கு அனுப்புதல்.
- மத்திய வங்கி 10 ரூபாய் குற்றிகளை மாவட்ட அடையாளங்களுடன் வெளியிடுவதை நிறுத்துதல்.

அத்துடன் சில்லறைத் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்குமாறு **குறிஞ்சிதரனுக்கு** தேவலோகம் கடிதம் அனுப்பும். இவற்றின் மூலமாக வடபகுதியில் சில்லறைத் தட்டுப்பாடு நீங்கும். இப்படி மாநாட்டுத் தலைவர் கூற, வாயுதேவனின் நன்றியுரையுடன் மாநாடு நிறைவு பெற்றது.

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை சட்டஉதவி ஆணைக் குழுவினால் இந்தியா மற்றும் வேறு நாடுகளில் இலங்கைப் பெற்றோருக்கு பிறந்த குழந்தைகளுக்கு இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கான முன் ஆயத்த நடமாடும் சேவை இன்று 5ஆம் திகதி வெள்ளிக் கிழமை மு.ப.10 மணியளவில் தென் மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் யு.என்.எச்.சி.ஆர் இன் அனுசரணையில் நடைபெறவுள்ளது. (3-7-29)




### பெற்றோரை நேசி

★ பெற்றோரின் பிரியத்தில் தான் அல்லாஹ்வின் பிரியமும் இருக்கிறது. பெற்றோரின் கோபத்தில் தான் அல்லாஹ்வின் கோபமும் இருக்கிறது.

★ உன் தந்தையின் உறவை பாதுகாத்துக் கொள். அதை முறித்து விடாதே. முறித்துக் கொண்டால் உன்னுள் இருக்கும் ஒளியை அல்லாஹ் போக்கி விடுவான்.

★ உங்களுடைய தந்தைக்கு நீங்கள் நன்றி செலுத்துங்கள். உங்கள் மகன் உங்களுக்கு நன்றி செலுத்துவான்.

★ பெற்றோரை வேதனை செய்பவனை இறைவன் எத்தனை வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டாலும் மன்னிக்க மாட்டான்.

★ வயது வந்த பெற்றோர்களுக்கு பிள்ளைகள் செலவு செய்யவில்லையானால் சுவர்க்கம் நுழைய முடியாது.

★ பெற்றோர் அநியாயம் செய்தாலும் அவர்களிடம் பிள்ளைகள் அன்பை செலுத்துவது கட்டாய கடமையாகும்.

★ பெற்றோரை மனம் நோகச் செய்து அவர்கள் அழுது கண்ணீர் வடிக்கச் செய்வது பெரும்பாவமாகும்.

★ மகன் பேரில் தகப்பனுக்குரிய கடமையைப் போன்று. உடன்பிறந்த அண்ணனுக்குரிய கடமையாகும்.

# அரசாங்கத்திடம் போதிய பணமில்லை

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)



அரசாங்கத்திடம் போதியளவு பணமில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை கூடிய விரைவில் நிறைவேற்ற முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவம் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளங்களை வழங்கக் கூட போதியளவு பணம் அரசாங்கத்திடம் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். அதிக வட்டியில் வெளிநாட்டு கடன்களைப் பெற்றுக்கொள்வதனைத் தவிர வேறு வாய்ப்பு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களை திசை திருப்பும் நோக்கில் பாரியளவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதாகைகள் நாட்டின் முக்கிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் உணவு இடைவேளையை 30 நிமிடங்களுக்கு வரையறுப்பதனால் அவர்களது செயற்திறன் குறையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ரூபாயின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்து செல்வதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் 100 நாள் திட்டம் தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

## விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் பதிவுகளை மேற்கொள்ள வலியுறுத்து

விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் தவணை முறையில் பணம் செலுத்தி அங்கத்துவம் பெற்ற 59 வயதுக்குட்பட்டவர்கள் தத்தமது கமநலசேவை நிலையம் ஊடாக அல்லது கமத்தொழில் காப்புறுதி சபையில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கமத்தொழில் காப்புறுதி சபையின் உதவிப் பணிப்பாளர் து.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் 2 முறைகளில் பயனாளிகள் அங்கத்துவம் பெற்றுள்ளார்கள். அவர்களில் தவணை முறையில் பணம் செலுத்தி அங்கத்துவம் பெறுகின்றவர்களும் முழுமையான பணம் செலுத்தி அங்கத்துவம் பெறுகின்றவர்களும் உள்ளடங்குகின்றனர்.

தவணை முறையில் பணம் செலுத்தி அங்கத்துவம் பெற்றவர்களின் விபரங்கள் கமநல சேவை நிலையத்தின் ஊடாக பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாமல் இருப்பின் அவர்கள் கமநல சேவை நிலையங்கள் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையில் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

பதிவின்போது தவணைப்பண குறிப்புத் புத்தகத்தினதும் தேசிய அடையாள அட்டையினதும் புகைப்படப்பிரதியை கொண்டு வருமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (3-9)

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து



## குரு- ஒரு நுழைவாயில்

ஆசான் ஒரு நுழைவாயில். அந்த நுழைவாயில் உலகைவிட அதிக அழகுடன் திகழ்கிறது. உங்களைக் கவருகின்றது. ஈர்க்கிறது. நீங்கள் வழி தவறி இருக்கறீர்கள். மழை பெய்கிறது. இடி இடிக்கிறது. காற்று அடிக்கிறது. குளிர்கிறது. உங்களுக்கு ஒதுங்க ஓர் இடம்தேவை. சுற்றும் முற்றும் பார்க்கிறீர்கள். ஒரு நுழைவாயிலைக் காண்கிறீர்கள். வாயிலுக்கு வருகிறீர்கள். ஏனென்றால் அது உங்களை ஈர்க்கிறது. வீதியில் உள்ள எதையும் விட அது மிக அழகாக இருக்கிறது.

குருதேவரின் நுழைவாயிலில் நீங்கள் நுழையும்போது நீங்கள் ஆன்மாவிற்கு வருகிறீர்கள். நீங்கள் உலகை ஒரு புதுநோக்கிலிருந்து காண்கிறீர்கள். உள்ளே இருந்துகொண்டே நீங்கள் இடி மின்னலைப் பார்ப்பீர்கள். மழை பொழிவதைப் பார்ப்பீர்கள். ஆனால் உங்களை எதுவும் குழப்ப முடியாது. சலனப்படுத்த முடியாது. உள்ளே கதகதப்பான உணர்வும் பாதுகாப்பும் உள்ளது. உலகம் மிக அழகாகத் தெரிகிறது. அருவருக்கத்தக்க உலகமாக அல்ல. அன்பு, ஒத்துழைப்பு, பரிவு எல்லாம் நிறைந்த உலகமாகத் தோன்றுகிறது. உங்களுடைய அச்சம் நீங்குகிறது.

குருதேவரின் கண்ணோட்டத்தில் முழு உலகையும் நீங்கள் காண இயலுகிறது என்பதுதான் நீங்கள் குருவை அடைந்ததன் பயன்.அதன் அடையாளம்.

முன்பிருந்ததுபோன்றே இன்றும் உலகை நீங்கள் காண்பீர்களானால் இன்னும் நீங்கள் தெருவிலே நின்று கொண்டு வாயில் மேல் விழிவைத்து வெறுமனே பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். இன்னும் உள்ளே நுழையவில்லை.

"குருதேவரின் கண்ணோட்டத்தில் முழு உலகைப் பார்ப்பது" என்பதன் பொருள் என்ன? நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் "இந்த நிலைமை குருவுக்கு ஏற்பட்டால் அவர் எவ்வாறு சமாளிப்பார்? குருவுக்கு முன் இச்சிக்கல் எழுந்தால் அவர் எவ்வாறு எடுத்துக்கொள்வார்.?"

"யாராவது குருவைப் பழித்தால் அவர் என்ன செய்வார்?" என்றெல்லாம் நினைத்துப்பார்ப்பீர்கள்.

இதற்கு விடை குருவின் சாந்நியத்தை உணர்வது ஆகும். குருநாதர் ஒரு சந்நிதானம். சாதாரண உறவு அல்ல. அவர் தம் சாந்நியத்தை உடன் இருப்பதை உணருதல் வேண்டும். உலகில் எல்லா உறவுகளும் முறியும். கூடும்; மீண்டும் முறியும். அங்கே விருப்பும் இருக்கும். வெறுப்பும் இருக்கும். இதுதான் சம்சாரம் எனும் சக்கரம். உலகின் துயரம். உலகில் எல்லா உறவுகளும் தலைகீழாக மாறும். ஆனால் சாந்நித்தியம் பரந்து விரிந்தது. எல்லையில்லாதது. முடிவில்லாதது. நிலையானது.

குருநாதரை உலகம் சார்ந்த உறவாக ஆக்கிவிடாதீர்கள். "அவர் என்னைப் பார்த்தார். அவர் என்னைப் பார்க்கவில்லை". "அவர் இதைச் சொன்னார். அவர் அதைச் சொல்லவில்லை". "வேறு யாரோ நெருக்கமாக இருக்கிறார். நான் நெருக்கமாக இல்லை". இக்குப்பைகள் அடங்கியதுதான் உங்கள் உலகம்.

குருதேவர் என்னும் நுழைவாயில் வழியாக ஆன்மாவாகிய வீட்டிற்கு வந்து சேருங்கள். குருநாதரின் பிரசன்னம் தான் உங்கள் வாழ்க்கையில், உங்கள் உறவுகளில் எல்லாம் ஒரு பூரண நிறைவைக் கொண்டு வரும்.

ஜூலைமாதம் பௌர்ணமி தினம் குருவினை வணங்கிக் கருதிக் கொண்டாடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியின் வேகத்தில் சுருண்டது கரீபியன்





அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 148 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணம் செய்துள்ளது.

இதில் முதல் டெஸ்ட் போட்டி டொமினிக்காவில் உள்ள ரோசியூ நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அவுஸ்திரேலிய அணியின் அனல் பறக்கும் பந்து வீச்சில் திணற ஆரம்பித்தது.

இதனால் சீரான இடைவெளிகளில் விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்து 53.5 ஓவர்களிலே 148 ஓட்டங்களுக்கு சுருண்டது.

ஷாய்ஹோப் அதிகபட்சமாக 36 ஓட்டங்களும், ஹோல்டர் 21 ஓட்டங்களும்எடுத்தனர். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அவுஸ்திரேலிய தரப்பில், ஜோன்சன். ஹாசல் வுட் தலா 3 விக்கெட்டுகளும், ஸ்டார்க் 2 விக்கெட்டுகளும். லயன், சுமித் தலா 1 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்சை தொடங்கியது. மேற்கிந்திய தீவுகள் பதிலடியாக மிரட்டியது.

இதனால் தொடக்க வீரர்களான வோர்னர் (8). மார்ஷ் (19) வந்த வேகத்தில் வெளியேறினர். அணித்தலைவர் கிளார்க்கும் (18) நிலைக்கவில்லை.

ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்புக்கு 85 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

ஆடம் வோகஸ் 20 ஓட்டங்களும், சுமித் 17 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருக்கின்றனர். பந்துவீச்சில், டெய்லர், ஹோல்டர், தேவேந்திர பிஜ் ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினார்கள். (க)

# நடப்புக் கிண்ணக் கிரிக்கெட்; கிளிநொச்சி ம.வி. வெற்றி



கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான வருடாந்த நட்புக் கிண்ணப் போட்டியில் கிளி ம.வி. அணி 4 இலக்குகளால் வெற்றிபெற்றது. கிளி.ம.வி.2004.05.15 அன்று தனது கடினப்பந்துத் துடுப்பாட்டப் பயணத்தை யாழ்ப்பாணக்கல்லூரியுடனான முதலாவது நட்பு ரீதியான துடுப்பாட்ட போட்டியுடன் ஆரம்பித்திருந்தது.

அதனை நினைவில் கொள்ளும் முகமாக கடந்த 2012ஆம் ஆண்டு முதல் இரு பள்ளி அணியின் 15 வயதுப் பிரிவினர்களுக்கிடையிலான நட்புக்கிண்ணத் துடுப்பாட்டப் போட்டி வருடந்தோறும்நடைபெற்றுவருகின்றது.

கடந்த 2 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 30 பந்துப்பரிமாற் றங்கள் இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் அணித் தலை வர் திவாகரன் முதலில் துடுப்பாட் டத்தை தேர்வு செய்தார்

அதற்கேற்ப முதலில்ஆடிய அணி 30பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 9இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக சிந்துஜன் 21, நவரஞ்சன் 15, கரிகரன் 13, நிலோதமன் 12, தனுராஜ் 11, சஞ்சீவன்11என ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் கிளி.ம.வி. சார்பாக யசிக்குமார் 3, த.யதுர்சன் 2, கு.யதுசன்1 என இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு 127 ஓட்டங்களைவெற்றி இலக்காக கொண்டு ஆடிய கிளி.ம.வி. 28.2பந்துபரிமாற்றங்களில்6 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களை பெற்று 4 இலக்குகளால்வெற்றிபெற்று நட்புக்கிண்ணத்தை தனதாக்கியது.

துடுப்பாட்டத்தில் கிளி.ம.வி. சார்பாக கு.யதுர்சன் 23, கீர்த்திகன் 23, தஜிகன் 15, சிவனுஜன் 10 என ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக சிந்துஜன் 3, சிவதர்சன்2, நவ ரஞ்சிதன்1 என இலக்குகளை வீழ்த்தி னர் போட்டியின் ஆட்ட நாயகனாக கிளி. ம.வியின் கு.யதுர்சன் தெரிவானார். (க)

# ஓல்ட் கோல்ட்ஸ் சம்பியன்



யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ்.மாவட்ட ஹொக்கி அணிகளுக்கிடையில் நடத்திய ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணி சம்பியனாகியது.

சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற போது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ட்ஸ் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறவில்லை. இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை வீணடித்தன. இருந்தும் போட்டி முடிவடைய 2 நிமிடங்கள் இருக்கும் தருணத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியின்வி.அருண் ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

இந்த கோலுடன் போட்டி நிறைவடைய ஓல்ட் கோல்ட்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது. (க)

## வலிகாமப் பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி சம்பியனாகிய வலிகாமப் பாடசாலைகள்

வடமாகாண கல்வி விளையாட்டு மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளின் அணிகள் மற்றும் வீர. வீராங்கனைகளுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டு விழாவின் மென்பந்தாட்டத் துடுப்பாட்ட போட்டியில் 19 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும் சம்பியனாகின.

வடமாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டுப்போட்டி 5 கட்டங்களாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு முதலாம் மற்றும் இரண்டாம் கட்டப் போட்டிகள் முல்லைத் தீவு மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த நிலையில், மூன்றாம்கட்டப்போட்டிகள் வவுனியாவில் நடைபெற்று வரு கின்றன.

இதில் 19 வயதுப்பிரிவு ஆண்கள். பெண்களுக்கான மென்பந்தாட்டப் போட்டி ஓமந்தை மத்திய கல்லூரி. வவுனியா நகரசபை ஆகிய மைதானங்களில் நடைபெற்றன.

ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியில் வலிகாமம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதலிடம் பெற்றது. இரண்டாமிடத்தை தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் மூன்றாமிடத்தை வவுனியா வடக்கு கல்மடு மகா வித்தியாலயமும் நான்காவது இடத்தை கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியில் வலிகாமம் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி முதலிடத்தைப் பெற்றது.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும் வலிகாமம் வட்டு இந்துக் கல்லூரி மூன்றாமிடத்தையும் மன்னார் தட்சணாமருதமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற...

ரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தனித்தனியே வழக்குத் தொடரப்பட்டன.

**வழக்குத் தாக்குதல்**

இதில் மூன்றாவது பிரிவினர் மீது இலங்கை தண்டனை சட்டக் கோவை பிரிவுகள் 140-சட்ட விரோத கூட்டத்தின் உறுப்பினராக இருந்தமை, 145-பயங்கர ஆயுதங்களுடன் கலகம் விளைவித்தமை, 149-பொது ஊழியருக்கு இடையூறு விளைவித்தமை, தாக்கியமை, 216-கைது செய்யப்பட வேண்டியவர்களை விடுவிப்பதற்கு முயற்சித்தமை, 433-குற்ற முறையிலான அத்துமீறல் ஆகிய பிரிவுகளில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ் வழக்கு விசாரணை நேற்றைய தினம் யாழ்.நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்தனர்.

**பிணை விண்ணப்பம்**

இலங்கை அரசியல் அமைப்பின் சட்டத்தின் பிரிவு 3ஆம் அத்தியாயத்தில் உறுப்புரை 13 உபபிரிவு 1 கூறுவது யாதெனில் எந்தவொரு சட்டத்திலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நடைமுறைகளின்படிதான் கைது செய்யப்படலாம்.

இது தவிர வேறு எந்த முறையிலும் கைது செய்யப்பட முடியாது எனவும் அது அடிப்படை உரிமையாகவும் காட்டப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை கோவை சட்டத்தின் பிரிவு 32 உப பிரிவு 1 "ஆ" பிரிவு கூறுவது யாதெனில், ஒரு நபர் தொடர்பில் நியாயமான முறைப்பாடு அல்லது நம்பத்தகுந்த குற்றம் தொடர்பான தகவல் கிடைக்கப்பெற்றால் ஒழிய எந்த நபரினையும் எழுந்தமானமாக கைது செய்ய முடியாது.

இந்த நிலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக குற்றத்தில் இல்லாதவர்கள் கைது செய்யப்பட முடியாது. இந்த வழக்கில் குறித்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.

**கலகம் ஏற்படவாய்ப்புண்டு**

ஏனைய வழக்குகளில் சந்தேக நபர்களினை விடுவித்தால்தான் சமாதானத்திற்கும் அமைதியும் சீர்குலைவு ஏற்படும். இந்த வழக்கினை பொறுத்தவரையில் சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்காமல் இருப்பதனால் தான் சமாதானத்திற்கும் அமைதிக்கும் சீர்குலைவு ஏற்படுகின்றது.

உதாரணமாக இவ் வழக்கின் சந்தேக நபர்களை சிறையில் அடைத்து வைத்திருந்து வழக்கு தொடரப்பட்டுள்ளதனால் தான் யாழ். நீதிமன்றை சுற்றிலும் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆகையினால் மேற்குறிப்பட்ட காரணங்களை விதிவிலக்கான காரணங்களாக கொண்டு சந்தேக நபர்களுக்கு பிணைவழங்குமாறு சட்டத்தரணி எஸ்.செலக்ரின் பிணை விண்ணப்பம் செய்தார்.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தனது உறவினரை பார்க்க சென்ற போதும், காற்றுப் போன தனது மோட்டார் சைக்கிளினை ஒட்டுவதற்காக அதன் ரயரை கழற்றி சென்றபோதும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறாகவும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனும் பிணை விண்ணப்பம் செய்தார்.

இவ்வாறு சந்தேக நபர்கள் தரப்பில் ஆஜராகியிருந்த ஒவ்வொரு சட்டத்தரணிகளும் பிணை விண்ணப்பம் செய்த பின்னர் 2009 ஆம் ஆண்டு மே 18இற்கு பின்னர் எந்தவித போர் சூழலும் இன்றி சமாதானமாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அதனை குழப்பும் வகையில் இக்குழுவினர் செயற்பட்டு நீதிமன்ற கட்டடத் தொகுதி, சட்டத்தரணியின் வாகனம், பொலிஸார் மற்றும் பொதுச் சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றுக்கு சேதம் விளைவித்துள்ளனர்.

ஒளிப்பதிவு நாடாக்களை வைத்து தொடர்ந்து புலனாய்வு விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றோம் என கூறி சந்தேக நபர்களை பிணையில் விடுவிப்பதற்கு பொலிஸார் கடுமையாக ஆட்சேபித்தனர்.

**பிணையில் விடுதலை**

தொடர்ந்து வழக்கினை ஆராய்ந்த பதில் நீதவான் பாடசாலை மாணவர்களான 3,4, 14,15 மற்றும் 40 ஆம் சந்தேக நபர்களினையும், 13ஆம் சந்தேக நபரான கல்வித் திணைக்களத்தில் பணியாற்றுபவரினையும் தலா இரண்டு இலட்சம் பெறுமதியான இரு ஆட்பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

**விளக்கமறியல் நீடிப்பு**

ஏனைய 34 சந்தேக நபர்களினையும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் ஏனையவர்களினை பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் அவற்றை தனித்தனியாக ஆராய்ந்து ஆட்சேபனை தெரிவிக்குமாறும் பொலிஸாருக்கு நீதவான் கட்டளையிட்டார்.

இதேவேளை சந்தேக நபர்களுக்காக N.சிறிகாந்தா, V.T.சிவலிங்கம், K.சயந்தன், S.செலக்ரின், முகமட் மாகிர், சர்மினி விக்னேஸ்வரன், K.கேசவன், N.தட்சாயினி, இராஜப்பு ஜெயம்தேவி ஆகிய சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர். (எ-4)

# இந்தியாவின் ஏற்பாட்டிலேயே...

பெயர் குறிப்பிட்டு அச்சுறுத்தும் வகையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும், சட்டத்தரணி ரட்னவேல் நீதவானிடம் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து அனந்தி சசிதரனுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான உத்தரவை நீதிபதி வழங்கினார். இந்த வழக்கின் அடுத்த விசாரணை ஜூலை மாதம் ஏழாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (எ-11)

(மற்றொரு செய்தி உள்ளே)

# ஜனாதிபதி...

யேற்ற பின்னர், அவரது பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடுகள் அண்மையில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

இதையடுத்து, படைத்தரப்பிடம் இருந்த ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு முற்றாக கலைக்கப்பட்டது. அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு பொலிஸாரின் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான எஸ்.எம்.விக்கிரமசிங்க தற்போது அந்தப் பதவியில் இருந்து இறக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் புதிய பொறுப்பதிகாரியாக அஜித் முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவருக்குக் கீழ் ஒரு மூத்த பிரதி பொலிஸ் மா அதிபராக பணியாற்றுமாறு எஸ்.எம்.விக்கிரமசிங்கவுக்கு பணிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# ஜனாதிபதியுடன்...

வரும் திட்டங்களை ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூன் வரவேற்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று மாலை தொலைபேசியில் அழைத்து பான் கீ மூன் வாழ்த்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

19-வது திருத்தச் சட்டத்தை செயற்படுத்தி நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியது போன்று 20-ம் திருத்தத்தையும் அவ்வாறு செய்து முடிக்கப்படும் என தான் நம்புவதாக பான் கீ மூன் கூறியுள்ளார்.

20-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவது தனது எதிர்பார்ப்பு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது பான் கீ மூனிடம் தெரிவித்துள்ளார். (எ-11)

# வடக்கு...

இவர்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 16-ம் திகதி ஆஜராகுமாறு உயர் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

வலிகாமம் -சுன்னாகத்தில் முன்னெடுக்கப்பட்ட மின்சார வேலைத்திட்டம் காரணமாக குடிநீர், சூழல் மாசு ஏற்பட்டதாக தெரிவித்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு மத்திய நிலையத்தின் தலைவர் ரவீந்திர காரியவசம் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

குறித்த மனு நேற்று உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியசாத் டெப், பிரியந்த ஜயவர்தன, அனில் குணரத்ன உள்ளிட்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீல னைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் மனுவின் பிரதிவாதிகளாக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை, மின்சார சபை, வட மாகாண முதலமைச்சர், வலிகாமம் பிரதேச சபை தலைவர், நோட்டன் மின்சார நிறுவகம் ஆகியோரது பெயர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் பிரதிவாதிகள் அனைவரையும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 16-ம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்துள்ளது. (எ-11)

# தேர்தலை...

ஜனாதிபதியை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் நிலைமைகளை கவனத்தில் கொண்டு உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோர இந்த பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

ஜனாதிபதியுடன் பேச வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று காலை கோட்டே நாக விகாரையில் கூடினர்.

இன்று காணப்படும் அரசியல் நெருக்கடி நிலை மைக்கு தீர்வாக உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

20-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டு தேர்தலுக்கு செல்வது மிக சிறந்த என தெரிவித்துள்ள அவர், இந்த சட்டத்தை நிறைவேற்ற இப்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது சிரமமான காரியம் எனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவாகியதன் காரணமாகவே 19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடிந்தது. 20-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற கிடைக்காது போனால், அதனை நிறைவேற்றாது தேர்தலுக்கு செல்ல நேரிடும்.

20வது திருத்தச் சட்டத்தை நிறை வேற்றுவதில் சிரமம் இருக்கும் என நான் கருதவில்லை. அதனை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வருவதிலும் பாரதூரமான பிரச்சினைகள் எதுவுமில்லை.

அரசாங்கத்தின் பெரும்பான்மை தொடர்பான பிரச்சினை உள்ளது. இதற்காகவே அவசரமான தேர்தல் ஒன்று தேவைப்படுகிறது எனவும் மாதுளுவாவே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# விசாகமடை...

மணிக்கு வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக வருகை தரும்படி குழுவின் தலை வர் எஸ்.சஜீவன் தெரிவிததுள்ளார்.

மேற்படி பகுதியிலிருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்த பின்னர் உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டு கடந்த 25 வருடங்களாக இந்த ஆலயத்துக்கு பொதுமக்கள் செல்ல இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை.

இந்தநிலையில் இவ்வாண்டு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். (எ-11)

## மரண அறிவித்தல்



### கந்தையா பரமசாமி

சரசாலை வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமசாமி நேற்று (4.6.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக்கணவரும், சிவராசா (பிரகாஸ் ஆடையகம்), ஆனந்தராசா (நிலா புடவையகம்), இரங்கநாயகி (லண்டன்), செல்வநாயகி, சிவநேசன் (சிவம் புடவையகம்), சிவபாலன் (லண்டன்), இன்பநாயகி, சிவகுமார் (அபி பல்பொருள் வாணிபம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாசுகி, தேவமலர், காலஞ்சென்ற (தர்மசீலன், ஈஸ்வரநாதன் மற்றும் கலையரசி, சுதாமதி, திருச்செல்வம் (கணபதி மில்), யோகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், குருபரன், யாழினி, தாரணி, செந்தூரன், பிரதீபன், வாகினி, கௌரிகரன், செல்வக்குமரன், உசாதேவி, மோகனசகிலன், லோகிதன், யதுர்சன், டிலக்சி, கிருசாந்தி, உசாந்தி, சாரங்கன், அபிவர்ணா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.06.2015 வெள்ளிக்கிழமை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சரசாலை கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் வீதி,
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

தகவல்:குடும்பத்தினர்
021 373 5893

(656)

## மரண அறிவித்தல்



### கணேசன் சர்வேஸ்வரன்

யாழ்.அளவெட்டியை பிறப்பிடமாகவும் இல.44 புதிய சிவிட்சென்ரர் இராமநாதபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட கணேசன் சர்வேஸ்வரன் 3.6.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கணேசன்- மனோன்மணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், கேதீஸ்வரி (தயா), குகதீஸ்வரன் (ஈசன்), நகுலேஸ்வரன் (நகுலன்-பிரான்ஸ்), நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், ரவிக்குமார் (ரவி), மோகனதாஸ் (மோகன்), செல்வராஜனி, நடனரூபி ஆகியோரின் மைத்துனரும், ராஜி, பிரதீப், கம்சன், சுஜிவன், சயந்தன், சதுசன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05.06.2015 இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இராமநாதபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-1174)

தகவல்:குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்ரெம்பரில்...

களும் முன்னெடுக்கப்பட்டுத்தான் வருகின்றன.

ஆனால் முன்னைய ஆட்சியாளர்கள் தமது பணப்பையை நிரப்பிய வேலைத்திட்டங்கள். குடும்பத்தை அபிவிருத்தி செய்த திட்டங்கள் தான் நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய 100 நாள் வேலைத்திட்டத்தில் பல விடயங்களை நிறைவேற்றியுள்ளோம்.

மேலும்பொது மக்களுக்கு அவர்கள் விரும்பும் அரசாங்கத்தை அமைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஆகவே புதிய நாடாளுமன்றம் எதிர்வரும் செப்டெம்பரில் அமைக்கப்படும்.

அதற்கான தேர்தல் விரைவில் நடத்தப்படும் எனவும் அமைச்சர் கயந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார்.

### ஆதரவு

இதேவேளை நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஆளுந்தரப்பு மற்றும் எதிரணியின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன வெளியிட்ட கருத்துக்கு சபைமுதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல வழங்கிய பதிலை அடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சபையில் கூறிய விடயமொன்று தொடர்பில் மறுபதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்தினால் மக்களின் தீர்ப்பு என்னவென்று உங்களுக்குப் புரியும் என்று கூறியிருந்தார்.

இவரின் இந்தக் கூற்றுக்கு பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்துமாறு தினேஷ் குணவர்த்தன கூறினார். நாம் தேர்தலுக்குத் தயார். அப்படியென்றால் பிரேரணையொன்றை கொண்டு வந்து நாம் அனைவரும் நிறைவேற்றிக் கொள்வோம் என்று தெரிவித்தார்.

அத்துடன், நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோருபவர்களை தத்தமது ஆசனத்தில் இருந்து எழுந்து நின்று சொல்லுமாறு எதிரணியினரை பார்த்து அவர் கூறினார்.

### எழமுடியாத நிலையில் எதிரணியினர்

எனினும் எதிரணியைச் சேர்ந்த (ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி) நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஓரிருவரைத் தவிர வேறு யாரும் உடனடியாக ஆசனங்களை விட்டு எழவில்லை. இதையடுத்து ஆளுந்தரப்பினர் எதிரணியினரைப் பார்த்து கூச்சலிட்டனர்.

இதனையடுத்து, தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோரியவர்களை தத்தமது ஆசனத்தில் இருந்து எழுந்து நிற்குமாறு லக்ஷ்மன் கிரியெல்ல ஆளுந்தரப்பினரை பார்த்து கூறியதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட சபையில் பிரசன்னமாகியிருந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஆசனங்களில் இருந்து எழுந்து நின்ற போதிலும், அரசில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஆசனத்திலேயே அமர்ந்திருந்தனர்.

இதனைத்தொடர்ந்து, எதிரணியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் ஒருவர் மற்றவரை பார்த்து ஒவ்வொருவராக தத்தமது ஆசனங்களில் இருந்து எழும்ப ஆரம்பித்ததுடன், இறுதியில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆசனங்களில் இருந்து எழுந்து நின்றனர்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் செனவிரட்ன உள்ளிட்ட எதிரணி சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆசனங்களில் அமர்ந்தவாறே இருந்ததுடன், சிலர் ஆசனங்களில் அமர்ந்தவாறே கைகளை உயர்த்தி ஆதரவளித்தனர்.

இதனையடுத்து நாடாளுமன்றத்தை கலைக்குமாறு தாமும் முன்மொழிவதாக சபாநாயகர் சாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (எ-11)


பதவிக்கான தேடல்...

சர்வதேச ரீதியில் இயங்கி வரும் எமது Canadian நிறுவனத்திற்கான புதிய கிளைகள் ஆரம்பமாக உள்ளன. (மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு) இவ் இடங்களில் பணி ஆற்றுவதற்கு பணியாளர்கள் தேவையாக உள்ளனர்.

- O/L, A/L முடித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்
- O/L இல்லாதவர்களுக்கான விசேட பதவி வாய்ப்புக்களும் உள்ளன

(C-1174) தொடர்புகளுக்கு : 077 188 2507

B.A (கலைமாணி) பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி) பதிவுகள் கோரப்பட்டுள்ளன

- A/L மூன்று பாடங்களும் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.
- பதிவுக்கட்டணங்கள் எவையும் அறவிடப்படமாட்டாது.
- விரிவுரைகள் ஆரம்பம் 06.06.2015 காலை 9.00 மணி. (விரிவுரைகள் எமது நிறுவனத்தில் நடைபெறும்)
- கடந்த வருடம் பரீட்சை எழுதிய 57 மாணவர்களில் 56 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.
- இம்முறை எமது நிறுவனத்தினூடாக பதிவுகளை மேற்கொண்ட 54 மாணவர்களில் எவரிடமும் பதிவுக்கட்டணம் அறவிடப்படவில்லை.

NJT பட்டப் படிப்புகள்
இல. 55, பலாலி றோட், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். மேலதிக தகவல்களுக்கு:- 0776624387 (655)

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
கடந்த March மாத DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்...
938 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்..
Register now : 0779 789 456 / 021 221 7781
No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973. | கண்டி வீதி, அரசடி. சாவகச்சேரி
(C-1170)

A/L மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானக் கருத்தரங்கு - 2015

2015 இல் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள; அரசியல் விஞ்ஞான மாணவர்களின் நலன்கருதி இலவச கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
இடம் : யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை
காலம் : 07.06.2015
நேரம் : காலை 8.30 மணி
அனுமதி முற்றிலும் இலவசம்
வளவாளர்கள் :
- சி.அ.யோதிலிங்கம் (ஆசிரியர், அரசியல் ஆய்வாளர், சட்டத்தரணி)
- சி.பிரசாத் (பிரபல அரசியல் ஆசிரியர் / வருகை விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
- துறைசார் விரிவுரையாளர்கள்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள அரசியல் விஞ்ஞான மாணவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (649)

BBA (MANAGEMENT) MEDIUM - TAMIL
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (ஒலுவில்) வெளிவாரி

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- இக் கற்கைநெறியானது மூன்று ஆண்டுகளாகும்.
- A/L-ல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- இப் பிரிவுக்குரிய விரிவுரைகள் ஆரம்பம் : 06.06.2015 (காலை 8.00 மணி)

குறிப்பு :
- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம்.
- சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம் : 06.06.2015 (பிற்பகல் 1.00 மணி)

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
விபரங்களுக்கு : S.அருள்நங்கை 021 222 8148 (C-1171)

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA
கனடா Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
Student VISA — UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
FREE Assessment
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11 (C-1175)


## இந்தியாவின் ஏற்பாட்டிலேயே...

நாட்டின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் சரணடைவு என்பது சர்வதேசத்தின், குறிப்பாக இந்தியாவின் ஏற்பாட்டில் இடம்பெற்றதாகவும், அவ்வாறு இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் போயுள்ள தனது கணவரும் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளருமான எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரனை நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கில் நேற்று வியாழன்று சாட்சியமளித்த வடமாகாணசபை உறுப்பினர் அனந்திசசிதரன் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட மனித உரிமைகள் சட்டத்தரணி கே.எஸ்.ரட்னவேல் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். அவரிடம் இந்த விசாரணை குறித்து கேட்டபோது. விடுதலைப்புலிகள் இராணுவத்தினரிடம் சரணடையும் நிகழ்வானது சர்வதேச ஏற்பாட்டில் இடம்பெற்றது என்றும், குறிப்பாக இந்தியாவும் இதில் பங்கெடுத்திருந்தது என்றும் அனந்தி சசிதரன் தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தார்.

### கனிமொழி பேசினார்

தனது கணவர் இராணுவத்தினரிடம் சரணடைவதற்கு முன்னர். அன்றைய தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியின் மகள் கனிமொழியுடன் சரணடைவது குறித்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாகவும், அதை அருகில் இருந்து தான் கேட்டதாகவும் அனந்தி தனது சாட்சியத்தில் தெரிவித்தார் என்றும் சட்டத்தரணி ரட்னவேல் தெரிவித்தார்.

இறுதி யுத்தத்தின் போது. அரசாங்கத்தின் பாதுகாப்பு உத்தர வாதத்தையடுத்து. இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராக இருந்த எழிலன் தொடர்பான ஆட்கொணர்வு மனு வழக்கு ஒன்றை அவருடைய மனைவி அனந்தி சசிதரன் தாக்கல் செய்தார்.

அந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் வவுனியா மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது அவர் சாட்சியமளித்தார்.

இராணுவத்தினரிடம் விடுதலைப் புலிகள் சரணடைந்த சம்பவம் முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இடம்பெற்ற காரணத்தினால். அந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்தி அ[illegible] தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் முறையீட்டு நீதிமன்றம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைய ஐந்து மனுக்கள் தொடர்பான விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன.

அவற்றில் எழிலன் தொடர்பான வழக்கு விசாரணையில் அவருடைய மனைவி அனந்தி சசிதரன் சாட்சியமளித்துள்ளார்.

### அச்சுறுத்தல்கள்

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படுகின்ற நாட்களில் எல்லாம். வழக்காளியாகிய அனந்தி சசிதரனும் ஏனைய மனுதாரர்களும் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளதாகவும், குறிப்பாக அனந்தி சசிதரனுக்கு எதிராக வழக்கு நடைபெறும் தினங்களில் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு அப்பால். அனந்தி சசிதரனுக்கு

23ஆம் பக்கம் பார்க்க....


வேலையாள் தேவை
கல்வி நிறுவனம் ஒன்றிற்கு எழுதுவினைஞர் (பெண்) தேவை
Student Success Centre
320 A, 1/2 Main Street, Jaffna.
(654) 077 616 9470

English for you
இவ் வருடம் G.C.E. O/L பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
Student Success Centre
(654) 077 616 9470

வேலைவாய்ப்பு
யாழ் நகர் பகுதியில் அமைந்துள்ள ஊடக நிறுவனமொன்றில் பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.
web developer & web designe.
துறைசார் அறிவும் அனுபவமும் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்றப்படுகின்றன. video editing & graphic editing தெரிந்திருந்தால் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 077 538 5494 (C-1176)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org